# அகஸ்தியர் ஆருடம்




## சண்முகானந்த புத்தகசாலை

பார்க் டவுன் சென்னை-3.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஜெகப்பிரசித்தி பெற்ற

# அகஸ்தியர் ஆருடம்

(பல ஆருட சக்கரங்கள் கொண்டது)

## காப்பு விருத்தம்

அகத்திய மாமுனிவர் அருளிச் செய்த
ஆருடந் தனையிந்த அவனியோர்கள்
மருத்துவமாய் நன்மை தீமையதனை
மகிழ்வுடனே யறிந்து [illegible] சொன்ன
ஜெகத்தினில் சின்னஞ்சிறு தியாகராஜன்
சிறப்புறவே பலநூல்களுதவி கொண்டு
தொகுத்தகவி தனக்குதுணை யிருக்கநல்ல
தொந்தியப்பா உந்தன்கழல் தொழுதிட்டேனே.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 24 | 43 | 20 | 29 | 61 | 27 | 2 |
| 48 | 10 | 13 | 59 | 51 | 16 | 8 | 45 |
| 34 | 39 | 30 | 41 | 56 | 53 | 40 | 23 |
| 50 | 57 | 53 | 17 | 64 | 54 | 63 | 49 |
| 21 | 60 | 11 | 1 | 6 | 12 | 58 | 19 |
| 46 | 38 | 32 | 18 | 55 | 31 | 37 | 47 |
| 35 | 7 | 14 | 42 | 52 | 15 | 9 | 36 |
| 3 | 26 | 44 | 22 | 28 | 62 | 25 | 5 |

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஓர் காரியத்தைக் குறித்து நினைத்தவர்கள் முன்பக்கத்திலுள்ள சக்கரத்தை ஓர் மலர் அரும்பு கொண்டு தனது குல தெய்வத்தை பயபக்தியுடனே துதித்து சக்கரத்திலுள்ள ஒரு எண்ணைத் தொட்டு அதிலுள்ள அட்டவணையின்படி பாடலை வாசித்துப் பலன்களை அறியவும்.

## 1. விநாயகர் துதி

ஓங்கார பிரணவத்தி னுதவியாலே
　　ஓதிடுவே னாருட உண்மைதன்னை
பாங்காக தொழிலோங்கும் மனைமே கூடும்
　　பாலர்கட்கு ஞானமுடன் கல்வியோங்கும்
நீங்காத நோய் நீங்கும் பொருளுஞ் சேரும்
　　நினைந்த யெண்ணம் பலிக்குமயா லுதவிதோன்றும்
தீங்கினி நேராது செழித்து வாழ்வாய்
　　தினமெட்டி லிதின்விபரம் தெரிகுவாயே.

உரை:-ஆருடம் உனக்கு ஒன்றாக வந்தால் உலகில் நீ படுங் கவலைகளெல்லாம் ஒழியும் தொழில் ஓங்கும் மனையில் மணம் கூடும், மைந்தர்களுக்கு கல்வியானது ஓங்கும்; நோய் நீங்கும்; கை விட்டுப் போன பொருள் வந்து சேரும், குடும்பத்தில் உனக்கு ஒதவிதமான கவலையு மேற்படாது. க்ஷேமலாபத்துடன் செழித்திடுவாய் கணேச மூர்த்தியின் கிருபையினால் எட்டு தினத்தில் உனது எண்ணமும் பலிதமாகும்; கவலைப்படாதே இது உத்தமம்

## 2. சண்முகன் துதி

வேலுண்டு வினையகலும் கஷ்டந்தீரும்
　　விச்சித்ர மயிலுண்டு கவலை போகும்
சூழுமே செல்வமது தொழிலுமோங்கும்
　　ஷண்முகனி னருளாலே நவியும் நீங்கும்
பாழான கேதுபத்து நாளிலப்பா
　　பதறாதே யுன்னை விட்டு விலகிப்போவான்
தாழாமல் வாழ்ந்திடுவாய் யதன்பின்னாலே
　　தள்ளாதே யகஸ்தியனா ருரைத்தநூலே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உரை :-உனக்கு சிவ ஷண்முகக் கடவுளின் கிருபா கடாக்ஷ மேற்பட்டிருப்பதால் சுகலமான காரியங்களும் தங்கு தடையில்லாமல் ஜயமாகும், தவிர கவலையும் கஷ்டமும் கடுரமான நோயும் கெண்டாதி கெண்டமும் அண்டாமல் விலகும்! தொழில் விர்த்தியும் புத்திரபாக்கியம் பெருக அதிர்ஷ்டவசமாகவும் ஆதரவான பந்துக்களின் உதவியு முண்டாகும். அன்றியும் ஒருவரை ஆதரிக்கும் கருணையும் அபாரமான செல்வாக்குகளும் உண்டாகும். ஆனால் 1 வருஷமாக உன் ஜென்மத்தில் கேது இருக்கிறான் அவன் 01 நாளில் ஒழிகிறான்; அதன்பிறகு க்ஷேமத்துடனிருப்பாய் இது உத்தமம்.

## 3 பரமசிவன் துதி

திரிபுரத்தனை யெரித்த தீனநாதன்
திருவருளா லுந்தனுக்கு தீ தொன்றில்லை
பெரியோர் களுதவியுண்டு பெறுவாய் பாக்கியம்
பெண்டுபிள்ளை குடும்பமுடன் பெருத்துவாழ்வாய்
பரிவான தொழில்முறையி லடைவாய் லாபம்
பார்ராளும் மன்னர்களால் பெருமையுண்டு
உரித்தான உந்தன்குல தெய்வந்தன்னை
உத்தமனே துதிசெய்தால் உசிதமாமே.

உரை :-உனக்குக் கண் மூன்றுடைய கங்கான மூர்த்தி யின் கருணையினால் கஷ்டமொன்றும் ஏற்படாது. பெரி யோர்களின் உதவியுண்டாகும். தொழில் முறையில்பெருத்த லாபங்களை யெல்லாம் அடைவாய்; மற்றும் தனவந்தர்க ளாலும் அரசர்களாலும் அரிய பெரிய சன்மானங்களும் கிடைக்கும்; பலவிதத்திலும் சந்தோஷத்தையே அடைவாய் எவ்விதமான எண்ணத்தை நீ நினைத்தாலும் அதற்கு இடையூறு ஏற்படாது, ஆனால் உனது குலதெய்வத்தை பூஜை செய்துவர நாளுக்குநாள் நன்மையடைவாய். இது உத்தமம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 4. விஷ்ணு துதி

அண்டபகி ரமண்டமதை யளந்தமாயன்
அருளாலே யுந்தனுக்கு அதிர்ஷ்டமுண்டு
விண்டிடுவார் புவிதனிலே விவேகியென்று
வேணபொருள் சேரும்புத்ர பாக்கியமுண்டு

கண்டபடி கவனமதை செலுத்திடாதே
கவலையின்றி நினைத்த யெண்ணம் முடியுமப்பா
தொண்டனே பதினொன்று நாளே போனால்
துணைபுரிவார் செங்கமல வண்ணன்தானே,

உரை;-உன் மனக்கவலை தீரும். தன லாபமுண்டு செய்தொழில் நீடிக்கும். அதனால் நல்ல க்ஷேமலாபத்தை யளிக்கும், தவிர அதிர்ஷ்டவசமான லாபமும் பெரியோர்கள் நேசமும் தேவதா பக்தியும் தானதர்மமும் உதயமாகும் சில நாளில் அறிவிலும் அழகிலும் சிறந்த ஆண் குழந்தை யொன்று மனையில் பிறக்கும். தவிர கமலகண்ணன் கருணையால் பொல்லாத நோயும் கெண்டாதி கெண்டமு நீங்கும் உன் மனத்தில்ஒரு கவலையை வைத்துவாடுகிறாய் அக்கவலை 11 தினத்தில் நீங்கி நன்மையாகும். இது உத்தமம்.

## 5, லட்சுமி துதி

பட்டதொரு துன்பமெலா மொழிந்து போச்சு
பாலகனே குருதிசையு முதவியாச்சு
விட்டதொரு தொழிலுனக்கு விர்த்தியாச்சு
வீட்டிலுள்ள கஷ்டமெல்லாம் விலகலாச்சு

முட்டவே எண்ணமெல்லாம் முடிவதாச்சு
மூதோர்கள் பொருள்சேரும் காலமாச்சு
அஷ்டலக்ஷ்மி கடாக்ஷமது மிகவுண்டாச்சு
அகஸ்தியர் சொல்லனுவளவும் பிசகிடாதே

உரை:- உனக்கு இனி குருதிசை வரப்போவதால் குடும்பத்தின் கவலைகளெல்லாம் நாளுக்கு நாள் படிப்படியாக நீங்கும். கைவிட்டுப்போன பொருளோ தொழிலோ ஜீவனோ 18நாளில் கிடைக்கும்தென் மேற்கு திசையிலிருந்து

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நன்மையான சங்கதி வரும். அதனால் லாபமும் சந்தோஷ முண்டாகும். குடும்பத்தின் வம்பு வழக்குகள் ஒழியு நோய் நீங்கும், கைபொருள் சேரும் உடன் நீரும். எந்த முகம் போனாலும் தங்க முகமாக இருக்கும்; 8 தினத்தில் உன் கவலைகள் நீங்கும், நினைத்த எண்ணமும் முடியும். இது உத்தமம்.

## 6, சரஸ்வதி துதி

நாமகள் கருணையாலே தலியுடன் கவலைநீங்கும்
தாமத மின்றியெண்ணம் தடையின்றி பலிதமாகும்
கோமகள் போலேவாழ குறைவின்றி மகப்பேறாகும்
ஆமென முன்னோர்வாக்கு ஒருதிங்கள் கழியப்பாரே
ஆதிநாள் வினைகளெல்லாம் அப்பனே அற்றுப்போச்சு
கோதின்றி விவாகமொன்று குடும்பத்தில் கூடலாச்சு
வாதிகள் கூட்டமெல்லாம் வகைகெட்டு போகலாச்சு
கியாதியாய் குடும்பத்திலுள்ள கலகங்கலொழியலாச்சு

உரை :- நீ கலைமகளின் கருணையாலே கவலை நீங்கி வாழ்வாய். கருத்தில் நினைத்த எண்ணமும் முடியும் களிப்புற புத்திரப் பேறடைவாய் மனையில் விவாக காரியங்கள் நடக்கும். உனை கெடுக்க யோசிக்கும் எதிரிகள்சதிக்குள்ளாவார்கள். குடும்பத்திலுள்ள கவலையும் கஷ்டமும நீங்கும். ஆதிமுதல் இதுவரையில் நீயடைந்த துன்பங்கலெல்லாம் விலகி இன்னும் ஒரு மாதத்தில் இன்பத்தையடையக் கூடும் இது உத்தமம்.

## 7. அருட்பெருஞ்ஜோதி துதி

அருட்பெருஞ் ஜோதியிலே மறைந்தசைவம்
அப்பனே வடலூரில் அமர்ந்த தெய்வம்
பெருங்கருணை யுனக்குண்டு பெறுவாய்ப்பாக்யம்
பொய்யாது எண்ணமெல்லாம் பலிக்குமப்பா
வருமப்பா வெளியூரின் செய்தியொன்று
வையமிசை புத்திரனை பெற்றுவாழ்வாய்
குருவுனக்கு ஒன்பதாம் வீட்டில் பார்வை
குறித்ததெல்லாம் ஐந்து நாளில் ஜெயமதாமே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உரை :-உனக்கு குரு ஒன்பதாவது வீட்டிலிருப்பதால் குறித்த பொருளாயினும் நினைத்த எண்ணமாயினும் கவலையின்றி கைக்கூடும். குடும்பத்தில் செல்வாக்குடன் வாழ்வாய்; வெளியூரிலிருந்து நன்மையான சங்கதியும் வரும் வெளியூரில் லாபம் கிடைக்கும்; மனையில் ஆண் குழந்தை பிரசவிக்கும். பந்துக்களினால் அமோகமான உதவியுண்டாகும்! உன் மனதிலுள்ள கவலைகளும் நாளுக்கு நாள் படிப்படியாக நீங்கும். நினைத்த எண்ணம் 5 நாளில் தடையின்றி முடியும். இது உத்தமம்.

## 8-வது பாட்டு

அண்டமதில் துன்பமிக கொண்டிடாதே
அன்பில்லா நெஞ்சரிடம் உறவாடாதே
கண்டபடி கவனமதை செலுத்திடாதே
கவலையெல்லாம் போகுமிந்த வாரத்தோடே
பண்டுபிள்ளை குடும்பமுடன் சுகமிருந்தே
பிணிவிலகும் தொழில் பெருகும் தவறிடாதே
மண்டலத்தில் மகிழ்வுடனே வாழ்குவாயே
மச்சமொன்று அடையாளம் முதுகிற்பாரே.

உரை:-இதுவரையில் உனைவருந்திய கெட்ட கிரகங்களெல்லாம் ஒழிந்து நல்ல கிரகங்கள் பார்வையாக இருப்பதால் உன் கஷ்டங்களெல்லாம் விலகும். ஆதலால் இனி துன்பத்தினால் வருந்தாதே. துன்மரர்க்கரின் உறவு வையாதே எண்ணத்தை பல வழியில் செலுத்தாதே. இனி உன் மனத்துயர் நீங்கும்; தொழில் விருத்தியாகும்; பந்துக்களுடன் சுகமாக வாழ்வாய். மனையில் ஓர் திருமணகாரியம் நடக்கும் இந்த வாரம் போக நன்மை தரும். இதற்கடையாளம் முதுகில் ஓர் மச்சமுமிருக்கும். இது உத்தமம்.

## 9-வது பாட்டு

ஆண்டவன் உனக்கு துணை இருப்பானப்பா
அப்பனே நீ செய்வதெல்லாம் லாபமப்பா
வேண்டியபொருள் வந்து சேருமப்பா
வேதனை யளித்திடும் நோய் தீருமப்பா
தாண்டினோர் வீடுவந்து சேர்வாரப்பா
தப்பாது பெண் குழந்தை பிறக்குமப்பா
தூண்டியின் மீன்போலே துடித்திடாதே
தினமைந்தில் உனதுயெண்ணம் பலிக்கும் பாரே!

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உரை: அப்பனே உனக்கு ஆண்டவனுடைய கருணை யிருப்பதால் நீ எதைச் செய்தாலும் அளவற்ற லாபத்தை யளிக்கும், பிணி விலகும்; உனது ஆயுள் காலத்தில் வரும் கெண்டங்கள் பாதிக்காது பகை கொண்டு சென்றோராயி னும் உறவுடன் லாபம் பெற்று சீக்கிரத்தில் வந்து சேருவார் கள், சில நாளில் மனையில் ஒரு பெண் குழந்தை பிறக்கும். புலவிதமான தொழில் செய்ய பாக்கியச் சிறப்பை யளிக்கும்; ஐந்து நாள் போக நினைத்த எண்ணம் அநுகூலமாகும் இது உத்தமம்.

## 10-வது பாட்டு

ஜெயகாலமுந்தனுக்கு உதவியாச்சு
 ஜென்மத்தில் சந்திரனும் உதயமானன்
பயமில்லை தொழில் முறையில் லாபமுண்டு
 பாலகனே உன் மனதின் கவலை நீங்கும்
நயம்பேசி குடிகெடுப்போர் நாசமாவார்
 நம்பியபேர்களை நீ யாதரிப்பாய்
செயலாக மாடுமனை கொள்ள நன்றும்
 சீக்கிரத்தில் தனலாப முனக்குண்டாமே

உரை :-உனக்கு ஜென்மத்தில் சந்திரனிருப்பதால் செய் தொழிலில் நல்ல லாபமும் மேலுக்குமேல் குடும்பவிர்த்தியு மேற்படும் நாளுக்கு நாள் மனக் கவலையும் நீங்கும் உன்னை நம்பின பேர்களை அன்புடன் ஆதரிக்கும் அமைப்புண்டாகும் நயமாக பேசி உனை கெடுக்க உத்தேசிக்கும் நயவஞ்சகர் கள் நாசமாவார்கள் மாடு மனை கொள்ள விர்த்தியும் பால் பாக்கியமும் உண்டாகும் உன் மனதில் கோரிய எண்ணமும் முடியும் உத்தமம்.

## 11-வது பாட்டு

உன்னுடைய மனம்போல முடியுமப்பா
 உத்தமனே குருவுனக்கு ஆக்ஷியானுர்
கண்ணியமாய் வாழ்ந்திடுவாய் கஷ்டம் தீரும்
 கார்த்திகேயனருளாலே செல்வமோங்கும்



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பண்டைய நாள் பொருள்சேரும் பகையும் நீங்கும்
மன்னவனே உன்மனையில் விவாகம் கூடும்
மன்னவனே இருபத்தி மூன்று நாளில்
மகா நல்ல சேதிவர மகிழுவாயே.

உரை:- உன் மனதில் நினைத்ததுபோல் முடியும்உலகில் கஷ்டமின்றி வாழ்வாய் பலவிதத்திலும் செல்வாக்குகள் உண்டாகும். மூதாதைகளின் பொருள் சேரும், மனையில் ஓர் விவாகமானது கூடும் வெளியிலிருந்து நன்மையான செய்தி வரவும் அது விஷயமாக சந்தோஷமுறும்படியும் லாபகரமு மேற்படும். ஆனால் 23 நாளில் குரு ஆக்ஷியாகின்ஞர் அந்த குரு திசையில் நீ குறித்த காரியங்களெல்லாம் விருத்தியடையும அஞ்சாதே இது உத்தமம்.

## 12-வது பாட்டு

பலனளிக்கும் கிரகமெல்லாம் பகையேயாச்சு
பனிரெண்டில் குருவுனக்கு பார்வையாச்சு
கலகமுடன் குடும்பத்தில் கவலையாச்சு
ஓர் கன்னியரால் மனதனிலே விரோதமாச்சு
நலமளிக்கும் தொழில் முறையில் நஷ்டமாச்சு
நம்பியபேர் வஞ்சனையால் கஷ்டமாச்சு
கிலேசமுடன் வந்தநோய் வருத்தலாச்சு
கிருபையுடன் வாரமெட்டில் சுகமுண்டாமே

உரை:- உனக்கு பலனளிக்கும் கிரகங்களெல்லாம் பகையாக இருக்கின்றது அதனால் குடும்பத்தில் பெருங்கவலையுண்டாக்கும் ஒரு கன்னிகையினல் கலகங்களேற்படும் தொழில் நஷ்டமும் நம்பினபேர் நயவஞ்சகமும் சதா மனக் கஷ்டமும் பொல்லாப்புகளையும் உண்டாக்கும் கவலையால் வந்த நோயானது பாதிக்கும். ஆனல் 27-நாள் நவகிரக பூஜை செய்துவர நாளுக்கு நாள் கவலைகள் நீங்கும் ஆனலும் 8-வாரம் போக உன் கஷ்டங்கள் விலகி சுகப்படுவாய் இது மத்திபம்.

## 13-வது பாட்டு

ஆத்திரபடவேண்டாம் அப்பாகேளு
அகஸ்தியரின் வாக்கியந்தான் வீண்போகாது

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கோத்திரமே விளக்க குலந்தழைக்கும்
கொன்றவனே புத்திரப்பேர் ருனக்குண்டாம்
கீர்த்தியுற மூத்தோர்கள் பொருள் கிடைக்கும்
சினங்கொண்டு பிரிந்தவரு முறவேயாவர்
கார்ந்திடுவா யுனையடுத்த பேரை நீதானே
கண்டிடுவா யிம்மாதம் கழியத்தானே

உரை:-அப்பனே அவசரப்படாதே 5-வருடமாக நீ பட்ட துன்பங்களெல்லாம் விலகி விட்டது இனி உன் குடும் பம் தழைத்தோங்கும் தானலாபமும் புத்ரலாபமும் சென்ற விடமெல்லாம் சிறப்புமுண்டாகும் பெரியோர் பொருள் சேர்க்கையும் பகையானவர்கள் ஒற்றுமையுண்டாகும் தவிர நாணயந் தவருத சொல்லுறுதியும் நயவஞ்சகர்களுக்கடங் காத திடகாத்திரமும் அபயமென்றடைந்தவர்களை யாதரிக் கும் தன்மையும் உண்டாகும் ஆனாலும் இந்த மாதம் போனால் உனது கஷ்டங்களெலாம் விலகி நல்ல அதிர்ஷ்டவ சங்களெல்லாம் ஏற்படும் இது உத்தமம்.

## 14-வது பாட்டு

பாரப்பா வுந்தனுக்கு நல்லயோகம்
பலிந்திடவே வந்ததினால் தனமேலாபம்
சீரப்பா நோய்விலகும் மணமேகூடும்
சிறுவர்கட்கு கல்வியுடன் செல்வ மோங்கும்
நேரப்பா குடும்பத்தின் கவலை நீங்கும்
நெடுந்தூரம் போனவரும் வரவே நேரும்
கோரப்பா பரம் பொருளை குணமுண்டாகும்
கொண்ட யெண்ணம் கைகூடும் நாளீரேழில்

உரை:-அப்பனே இன்னும் 14 நாளைக்குப் பிறகு உனக்கு நல்ல யோகமேற்படப் போவதால் அது முதல் பல வழியிலும் தனலாப முண்டாகும் மணையில் திருமணம் நடக்கும் சிறுவர்களுக்கு கல்வியானது ஓங்கும் சீரும் செல்வமும் உண் டாகும் உடலை வாட்டும் நோயும் கெண்டமும் உடனே விலகும் ஆயுள் பலமும் அதிர்ஷ்டவசமும் ஏற்படும். குடும் பத்திலுள்ள கவலையும் கஷ்டமும் நீங்கி கொடுக்கல் வாங் கலில் லாபத்தை யளிக்கும் பதிவிட்டு போனவர்களாயினும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அதிவிரைவில் க்ஷேமத்துடன் வந்து சேருவார்கள்; இது முதல் நாளுக்கு நாள் க்ஷேமத்தையளிக்கும் நினைத்த எண்ணமும் முடியும் உத்தமம்.

## 15-வது பாட்டு

பஞ்சமத்தில் சுக்கிரனின் ஆக்ஷியாச்சு
பட்டதொரு துன்பமெல்லாம் பறந்து போச்சு
தஞ்சமென்ற பேர்களை நீ காக்கலாச்சு
தனவந்த னென்றபெய ருனக்குண்டாச்சு
வஞ்சமுள்ள பஞ்சர்குலம் மொழியலாச்சு
ஓர் வஞ்சியரால் பொருள்சேரும் வழக்கும் போச்சு
அஞ்சாதே கெண்டமெலாம் தவரலாச்சு
அறுநான்கு நாளதனில் அதிர்ஷ்டமாச்சே

உரை :- சுக்கிரன் 5ம் இடத்தில் ஆக்ஷியாக இருப்பதால் ஆதிமுதபடைந்த கவலைகளெல்லாம் இனி விலகும் ஒருவர் தாக்ஷிண்யமில்லாமல் தனலாபத்துடன் வாழ்வதன்றி தஞ்சமென்றவர்களையும் ஆதரிப்பாய் சிலநாளில் ஓர் கன்னிகையால் கணக்கற்ற பொருள்களெல்லாம் சேரும்; அல்லாமலும் உனை கெடுக்க யோசிக்கும் சத்திராதிகள் ஒழிவார்கள். குடும்பத்தின் தொந்தார்த்தங்களெல்லாம் நீங்கும் நோயும் கெண்டமும் நீங்கி நீடித்த ஆயுளுடன் வாழ்வாய் ஆனாலும் 24 நாள் போக நல்ல யோகத்துடனே வாழ்வாய் நினைத்த எண்ணமும் முடியும் இது உத்தமம்.

## 16-வது பாட்டு

இவ்விடத்தி லிருந்தாலும் சுகமிராது
இடம் விட்டு போயும் பயன்படாது
கள்ளமன துள்ளவரை கருதொணாது
கருத்தினிலே நினைத்த யெண்ணங் கைகூடாது
உள்ளபடி நடந்தாலும் உருப்படாது
உன்மனைவி மக்களுனக் கடங்கிடாது
அல்லது உனைவிட்டு அகன்றிடாது
அப்பனே மாதமொன்று கழித்திடாயே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உரை:-உன்னுடைய நல்ல கிரகங்களெல்லாம் கோளா ராக இருப்பதால் இருக்குமிடத்திலும் சுகமிருக்காது வேரிடத் தில் சென்றாலும் அதனால் லாபமிருக்காது எண்ணிய எண் ணங்களும் கூடோது; மனைவி மக்களும்உனக்கு அடங்காது குடும்பத்திலும் மனது நிமதியிராது நீ நன்மையைச் செய் தாலும் அதனால் நன்றி ஏற்படாது. இப்பொழுது நீ படும் கஷ்டங்களெல்லாம் 7 மாதம் வரையில் உனைவிட்டு நீங் காது; ஆனால் சில நாளில் கள்ள சிந்தையுடையவர்களால் பல தொல்லைகள் விளையக் கூடும் அதற்கு வெகு ஜாக்கிரதை யுடன் நடந்துக் கொள்ளவும் இது உத்தமம்.

## 17-வது பாட்டு

சுகமுடனே நினைத்ததெல்லாம் பலிக்குமப்பா
சுக க்ஷேம மாயிருப்பாய் புவியின்மீது
பகையொன்றும் நேராது குடும்பந்தன்னில்
பலவிதத்தில் செய்த தொழிலில் லாபங்காணும்
அகமகிழ பெரியோர்கள் பொருள் கிடைக்கும்
ஆதரவாய் பந்துக்களும் உதவியாவார்
மிகவருந்தும் நோயதுதான் மருந்தால் தீரும்
மைந்தனே வாரமது யிரண்டில் தானே

உரை:-உன் மனதில் நினைத்த எண்ணம் பலிதமாகும்; எப்பொழுதும் க்ஷேமமாகவே வாழ்வாய் குடும்பத்தில் ஒரு விதமான பகையும், தொந்தார்த்தங்களும்ஏற்படாது தொழில் முகாந்திரத்தில் பலவழியிலும் நல்ல லாபத்தை யளிக்கும் முன்னோர்களின் பொருள் சேரும் பந்துக்களின் உதவியும் அடுத்தவர்களின் ஆதரவும் உண்டாகும் பீடிக்கும் நோயா னது மணிமந்திர ஔடத்தினால் பெரிதும் நீக்கும் இரண்டு வாரத்திற்குள்ளாக உனது கவலைகள் முற்றும் சுகமடைவாய் இது உத்தமம்,

## 18-வது பாட்டு

வாக்கான கிரகமெல்லா முச்சமாச்சு
வருமையுடன் பெரும்பிணியு மொழியலாச்9
போக்கான பொருள்களெல்லாம் சேரலாச்சு
பொல்லாத கஷ்டமெல்லாம் பறந்துபோச்சு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நோக்கி திசை தவரியபேர் வருகலாச்சு
நீடித்துத் தொழிலுனக்கு மகப்பேராச்சு
கேட்காத நற்செய்தி கேட்கலாச்சு
கவலையெல்லாம் நாளாறில் நன்மையாச்சே

உரை:-உன் கவலைகள் விலகும் குடும்பத்திலுள்ள வறுமையும் நோயும் வம்பு வழக்குகளும் சூரியனைக் கண்ட பனி போல் விலகும் கைவிட்டுப்போன பொருள் தவணையின்றி கிடைக்கும் பொல்லாத திசையினால் மனையை விட்டுப்பிரிந்தவராயினும் உனது நல்ல ராசியினால் அவர்கள் தொல்லையின்றி வருவார்கள். வெளிநாட்டுச் செய்தியும் லாபகரமும் சதா சந்தோஷகரமும் உண்டாகும். தொழில் விர்த்தியும் புத்திர சம்பத்தும் பெறுகுவதுடன் 6-நாளைக்குப் பிறகு நல்ல அதிர்ஷ்ட வசங்களேற்படும் நினைந்த எண்ணமும் முடியும் இது உத்தமம்.

## 19-வது பாட்டு

இதுவரையில் நீபட்ட துன்பமெல்லாம்
எவராலும் கூறிடவே முடியாதாப்பா
சதிசெய்தார் உந்தனுக்கு வேண பேர்கள்
சஞ்சலங்கள் மிகவடைந்தாய் தரணி தன்னில்
நிதியான கேது உந்தன் ஜென்மம் விட்டு
நீங்கிடுவான் இருபத்தி யேர்நாள் போனால்
அதன் பிறகு எதுநீ செய்த போதும்
ஆக்ஷியுடன் வாழ்ந்திடுவாய் அஞ்சிடாதே

உரை:-இப்பொழுது நீ வருத்தம் மிகுதியால் வாடுகின்றாய். இதுவரையில் வையகத்தில் நீ பட்ட கஷ்டங்களை அளவிட்டு கூறமுடியாது குடும்பத்தில் குணமில்லை தொழிலிலும் தொந்தார்த்தம் நம்பிய பந்துக்களும் உன்னை பல விதத்தில் நாசம் செய்தார்கள் சில நாளைக்கு முன் நோயின் கவலையில் உன் நெஞ்சத்தை உருக்கியது இடம் விட்டு வேறிடம் மாறி பரதேசி போல் திரியும் உனக்கு கி‍்ஷத்தின் கூர்மை ஏற்பட்டது. ஆனால் அது ஒருவருதவியால் தவறி விட்டிருக்கலாம் இக்கஷ்டங்களெல்லாம் கடந்த 2 வருஷமாக ஏற்பட்டிருக்கலாம் ஏனென்றால் உன் ஜென்மத்தில் கேது இருக்கிறான் அவன் 21-நாளில் ஒழிகிறான். அதன் பிறகு சுகமடைவாய் இது உத்தமம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 20-வது பாட்டு

கடன் பட்ட நெஞ்சம் போல் கலங்கிடாதே
கபடமுள்ளோர் நேசமதை வைத்திடாதே
படமுடியா கஷ்டமென்று பயப்படாதே
பதட்டமாய் தெய்வத்தை நிந்திக்காதே
குடும்பமதில் பகை செய்து குணங்கெடாதே
குருபலனும வாரமூன்றில் வரும் தப்பாதே
தடமதினில் நோய் நொடியால் தவித்திடாதே
தணிந்திடவே நவக்கிரக பூஜைசெய்யே.

உரை:-உன் மனதில் நினைத்த எண்ணம் இப்பொழுது முடியாது அலைச்சல் திரிச்சல் அதிக மனக்கவலை கைப் பொருள் விரயமும் தொழிலில் நஷ்டத்தையு முண்டாக்கும் ஆனாலும் கபடமானவர்களின் உறவை அறவே நீக்கு அவர் கள் நல்லவர் போல் பேசி உன்னை மோசம் செய்வார்கள். கிரகக் கோளறினல் பந்துக்களை பகைக்காதே மனவிலாகூ லத்தினல் தெய்வத்தை நிந்தனை செய்யாதே உனக்கு ராகு பகையானன். கேது நீச்சமடைந்தான். இன்னும் மூன்று வாரத்தில் குரு நல்லவனக வரப்போகிருன் நீ நவகிரகத்தை பூஜை செய்துவர அதனுல் நன்மை யடைவாய் இது மத்தி பம்.

## 21-வது பாட்டு

ஐந்தினிலே குருபகவான் அமர்ந்ததாலே
ஆழிசூ ழுலகினிலே செழித்து வாழ்வாய்
மைந்தர்களை யீன்றதனல் சுகமே காண்பாய்
மனக்கவலை விலகிவிடும் வழக்குவெல்வாய்
வந்திடுவார் திசைமாறிப்போன பேர்கள்
வலுத்திடும் வியாபாரம் நேரயும் நீங்கும்
சொந்தமதில் மணங்கூடும் பொருளுஞ் சேரும்
சொல்மொழிதான் தவறிதை சுட்டுப்போடே.

உரை:-ஜாதகருக்கு ஐந்தாமிடத்தில் குரு இருப்பதால் குடும்பம்செழித்து ஓங்கும் மனை நிறைந்த மக்களைப் பெறுவாய்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அந்தப் புத்திரர்களால் அளவற்ற சுகத்தைப் பெறுவாய் இது வரை உன் மனதில் குடிகொண்ட மனக்கவலை விலகும் குடும்பத்திலுள்ள வழக்குகள் ஒழியும் வெளியூருக்குச் சென்ற பேர்கள் அதிக லாபத்துடனே வருவார்கள் வியாபாரம்வலுக்கும் பிணியானாது நீங்கும் சொந்த பந்துக்களில் ஓர் விவாக காரியம் நடக்கும்; கைப்பொருள் சேரும; இப்பலன்களெல்லாம் 13-நாளைக்குப் பிறகு கூடிவரும். இந்த வாக்குத் தவருது. தவறினுல் சாஸ்திரத்தை எரித்து விடலாம். இது உத்தமம்.

## 22-வது பாட்டு

உள்ளத்தின் கவலையெல்லாம் உடனே தீரும்
உறவற்றுப் போனவரும் வந்து சேர்வார்
விள்ளவு முடியாது உந்தன் வாழ்க்கை
வினேதமாய்ப் பொன் பொருளும் சேர்க்கையாகும்
வள்ளலின் கிருபையினுல் வருடமூன்று
வலுக்குமய்யா எத்தொழிலை செய்தபோதும்
கள்ளதிரு மால் மருக னுதவியாலே
கருதியதெல்லா முனக்கு ஜெயம தாமே

உரை:-இனி உன் கவலைகளெல்லாம் நிலவைக் கண்ட இருள் போல் விலகும் ஜென்ம விரோதிகளாயினும் குடும்பத்தில் வந்து சேருவார்கள். சில தினத்திலே வினேதமான பொன் பொருள்களெல்லாம் சேர்க்கையாகும். எத்தொழிலை செய்தாலும் ஏராளமான லாபத்தையளிக்கும் இந்த ராசி 3-வருடத்திற்கு நல்ல யோகமாக இருக்கும். ஆனுல் வாரத்திற் கொரு நாள் ஏழைகளுக்கு உன்னு லியன்றளவு தர்மம் செய்துவர நாளுக்கு நாள் உனது குடும்பம் மேலுக்கு மேலாக ஓங்கும் இது உத்தமம்.

## 23-வது பாட்டு

யாரப்ப உந்தனைப்போல் பாக்கியசாலி
அகிலமதில் நினைப்பதெல்லாம் ஜெயமேயாகும்
பார்வேந்தன் போலுனக்கு பாக்யமுண்டாம்
பலதொழிலும் செய்திடவே லாபமுண்டாம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கார்வண்ண னருளால் பெண் குழந்தையுண்டாம்
கவலையெல்லாம் தீருமதால் கலங்கவேண்டாம்
சீர்பெறவே சனிவாரம் விரதம் பூண்டு
சிறப்புடனே நவக்கிரக பூஜை செய்யே

உரை:-உன் மனதில் நினைத்த எண்ணம் பலிதமாகும் தொழிலில் அளவற்ற லாபமும் தழைத்த குடும்பத்தின் செழிப்பும் அரசன்போல் அம்சம் பொருந்திய வாழ்வு உண்டாகும். பரந்தாமனின் கருணையால் சில தினத்தில் உன் மனையில் ஓர் பெண் குழந்தையும் பிறக்கும் அக்குழந்தையி னால் குடும்பத்திலுள்ள பல கவலைகளும் நீங்கும்; ஆனால் பிரதி சனிவாரம் விரதமிருந்து நவக்கிரகாதிகளை நம்பிக்கை யுடன் கும்பிட்டு வர பலவித வம்பு வழக்குகளெல்லா மொழிந்து தெம்புடன் வாழ்வாய் இது உத்தமம்.

## 24-வது பாட்டு

போனதை மறந்து விட புகழேயுண்டு
புண்ணியனே மனக்கலக்கம் வேண்டாமின்று
கானகம் சென்ற ராமர் மற்றும் தர்மர்
கனநளன் அரிச்சந்திரன் கதையைப்போலே
ஆனதோர் இம்மாதம் சென்றதானால்
அழிந்திட்ட பொருளனைத்தும் வரவே நேரும்
வேணவே செல்வமுடன் கலகம் நீங்கும்
வர்த்தகமும் புத்திரரும் மிகவுண்டாமே

உரை:-நீ இதுவரையில் வெகுநாளாக அளவிலாத கஷ்டங்களையும் தொழிலில் நஷ்டங்களையும் பலவிதமாக அடைந்து வருவாய். ஆனாலும் அக்கவலைகளை யெல்லாம் இப்பொழுதே மறந்துவிடு. தைரியத்தை விடாதே இதற்கு முன் மூத்தோர்களெல்லாம் சனியனின் கோளாறினால் எவ்வளவோ கஷ்டங்களை யெல்லாம் அடைந்து முடிவில் சுகத்தையனுபவித்தது போல் உனக்கு இம்மாதம் போனால் வெகு நன்மையுண்டாகும் கஷ்டமுற்ற குடும்பம் களிப்புற்றிருக்கும் தொழில் ஓங்கும் நோய் நீங்கும்; இருந்தாலும் தற்போது



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உனக்கு கொஞ்சம் கவலையே தோன்றும். இப்பொழுது நினைத்த எண்ணமும் தவக்கமாகவே முடியும் இது மத்திபம்.

## 25-வது பாட்டு

குற்றமுள்ள கிரகமெல்லாம் விலகிப்போச்சு
குடும்பத்தில் ஜெயகால முதலுமாச்சு
பற்றறவே பதிமூன்று நாளேபோனால்
பாலகனே ஐந்தாண்டிற் குறைவேயில்லை
சுற்றமுடன் வாழ்ந்திடுவாய் சுகமேகூடும்
சுகவாழ்வும் மகப்பேறும் தொழிலும் ஓங்கும்
அற்புதமாய் பொருள் சேரும் அரசனைப்போல்
அகமகிழ வாழ்ந்திடுவாய் அதிஷ்டந்தானே

உரை:—உனக்கு இதுநாள்வரை இடைஞ்சல் விளைத்த கிரகங்களெல்லாம் விலகிப் போய்விட்டது இன்னும் பதிமூன்று நாள் போனால் சந்திரன் 7-ம் இடத்திலும் குரு 5-ம் இடத்திலும் சுக்கிரன் 7-ம் இடத்திலும் சனி 10ம் இடத்திலும் பார்வையாகின்றான் அதனால் 5-வருடத்திற்குக் குறைவின்றி அதிஷ்டவசம் பொருந்தி அரசன்போல் வாழ்வாய் சுபமான காரியங்கள் கூடும் சுகமான வாழ்வும் புத்திர சம்பத்தும் தொழிலில் மேன்மையும் நோயானது விலகும் அற்புதமான பொன் பூஷணாதிகள் சேர்க்கையுமுண்டாகும் தற்போது நினைத்துள்ள எண்ணமும் பலிதமாகும். இது உத்தமம்.

## 26-வது பாட்டு

பாலனே இனியொன்றும் பயமேயில்லை
பலிக்குமப்பா உந்தனுட எண்ணமெல்லாம்
மேலான லாபமெல்லாம் அடைவாயப்பா
மேதினியில் செய்தொழிலும் நீடித்தோங்கும்
ஆலமுண்டோன் அருளால் ஆண் குழந்தை
அப்பனே உன் மனையில் பிறக்கும் பாரு
கலகமின்றியிரு பத்தேழ் நாளில்
கனவிலும் அதிசயங்கள் காண்பாய்தானே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உரை:-மனதில் நினைத்த எண்ணம் பலிதமும் புதிய பந்துக்களின் சேர்க்கையும் பொன் பூஷண தனலாபமும் தொழில் முகாந்திரத்தில் மேன்மையும் மனையில் அழகிலும் ஆயுள் பலத்திலும் சிறந்த ஆண் குழந்தையும் பிறக்கும் அதனால் ஆதரவுடன் குடும்பம் கீர்த்தரயில்லாமல் மேன்மையுடன் தழைத்தோங்கும் கெண்டாதி கெண்டமும் பொல்லாத நோயும் நில்லாது விலகும். அந்தவர்களின் உதவியும் உண்டு வடமேற்குத் திசையிலிருந்து நன்மையான செய்தி வரும் ஆனால் 27-நாளில் உன் கவலைகளெல்லாம் நீங்கி மனது நிம்மதியடையும் இதற்கடையாளமாக இரவிலே அதிசயமான கனவுகள் காண்பாய் இது உத்தமம்.

## 27-வது பாட்டு

இக்கட்டாய் முடித்ததெல்லாம் இனிதாய் தீரும்
எண்ணிய எண்ணமெல்லாம் ஜெயமேயாகும்
பக்க நின்று குலதெய்வம் பாதுகாக்கும்
பாலர்கட்கு ஞானமுடன் கல்வியோங்கும்
தக்கதொரு தொழில் நடக்கும் தனமே சேரும்
தாயாதி பொருள் சேரும் நோயும் நீங்கும்
மிக்க பெரியோர்களுட உதவி கூடும்
மேல்நாட்டு செய்தி கண்டு மகிழுவாயே.

உரை ;-உன்னுடைய ஆபத்துக்களெல்லாம் அபலமாய்ப் போகும் குடும்பத்தில் மடிந்த குலதெய்வங்கள் உனக்கு பக்கத் துணையாக இருக்கும் அரிய பெரியோர்களின் அனுகூலமுண்டாகும், தாயாதிகளின் பொருள் சேரும். நோய் நீங்கும் தொழிலானது பலவிதத்திலும் ஓங்கும். குடும்பத்தில் பாலர்களுக்கு ஞானம் கல்வி அதிகரிக்கும் அயல்நாட்டுச் செய்தியாய் உனக்கு அனேக லாபமுண்டாகும் கவலையின்றி இனி களிப்புற்று வாழ்வாய் தவிர நினைத்துள்ள எண்ணமும் பலிதமாகும் இது உத்தமம்,

## 28-வது பாட்டு

கிரகங்கள் பொல்லாது பொல்லாதப்பா
கீர்த்தியில்லை நினைப்பதெல்லாம் தடங்கலாகும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பரதேசி போலாக்கும் பயங்கள் தோணும்
பாலகனே செய்தொழிலில் நஷ்டங்காணும்
உரமான பெற்றோரும் வெறுப்பாரப்பா
உள்ளதொரு பொருளழியும் நோயுங் காணும்
புறம்பேசும் குறும்பர்களால் கலகம் நேரும்
போக்கிடுவா யறுமூன்று வாரந்தானே

உரை:-கிரகங்களெல்லாம் பொல்லாததாக இருப்பதால் சுற்றமும் மனைவி மக்களும் பிரிவார்கள்; மனதில் திகிலையுண்டாக்கும் தொழில் நஷ்டமும் மனக்கஷ்டமும் உண்டு பண்ணும் பெற்றோர்களும் உனைப் பழிப்பார்கள் உள்ள பொருளுமழிந்து வறுமையால் வாடச் செய்யும் நோயின் கவலை மிகுக்கும் சில பேர்களால் உன் விஷயத்தில் கலகத்தையும் நிந்தனையும் உண்டாக்கும் எண்ணத்திற்கு பின்னமேற்படும் ஆனால் 18-வாரம் போக நன்மையளிக்கும் இது மத்திபம்.

## 29-வது பாட்டு

இப்புவியில் பட்டதுயர் விலகிபோச்சு
இனியொன்றும் குறைவில்லை ஜெயமுண்டாச்சு
தப்பிதங்களணுகாது தழைத்து வாழ்வாய்
தனலாப மடைந்திடுவாய் நஷ்டமில்லை
ஒப்பவே ஜென்மத்தை விட்டு ராகு
விலகிடுவான் இருபத்து ஐந்துநாளில்
அப்பனே அதற்குப்பின் நினைத்ததெல்லாம்
அகஸ்தியர்சொல்போல் நடக்கும்அதிஷ்டந்தானே

உரை:-இவ்வுலகில் இதுவரையில் நீ பட்ட துன்பங்களெல்லாம் விலகிப் போய்விட்டது இனி உனக்கு ஆண்டவனுடைய சகாயமேற்பட்டு இருப்பதால் ஒரு குறைவுமின்றி சுக க்ஷேமத்துடனிருப்பாய் தவிர எத்தகைய காரியத்தை நினைத்த போதிலும் சித்தியாகும் ஆனால் 18-மாதமாக உனை பாதித்திருந்த ராகு இன்னும் 25-நாளில் ஒழிகிறான். அதன் பிறகு உன் செய்கைகளெல்லாம் அதிஷ்டவசமாகவே இருக்கும் எந்த விதமான எண்ணமும் முடியும் இது உத்தமம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 30-வது பாட்டு

ஆதிமுதல் இதுவரையிலனேக துன்பம்
அப்பனே யனுபவித் தவஸ்தையுற்றாய்
பாதியிலே பெரியோரின் பொருளைத் தோற்றாய்
பலவிதத்தில் தொழில்முறையில் நஷ்டமுற்றாய்
வாதியாய் பந்துகட்கும் வைரியானாய்
வலுத்தமுள்ள நோயாலே வருத்தப் பட்டாய்
நீதியாய் இருபது நாள் தான் சென்றால்
நிச்சயமாய் சுகமுண்டு நினைத்துப்பாரே

உரை:-ஆதிமுதல் நீ அளவற்ற கவலைகளை யனுபவித்து வருகின்றாய் பெரியோர்களின் பொருளையுமழித்தாய் தொழிலில் பலவித நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கலாம் பந்துக்களுக்கும் சில நாள் வைரியாக இருந்தாய் நோயினாலும் வருந்தினாய் அந்த நோயினால் வேண்டிய பொருள்களையுமழித்தாய் ஆனால் தைரியத்தை விடாதே இன்னும் இருபது நாள் போன பிறகு கஷ்டங்களெல்லாம் விலகும் குடும்பத்தில் சுகத்தையளிக்கும் உனது எண்ணமும் முடியும் இது உத்தமம்.

## 31-வது பாட்டு

இப்பொழுது உந்தனுக்குக் கெட்டகாலம்
இருந்தாலும் பயமில்லை சுகமுண்டாகும்
கொப்பனவே குடும்பத்தில் கலகமாகும்
கொடுத்ததை கேட்டாலே பகையுண்டாகும்
ஒப்பவே உபகாரம் செய்திட்டாலும்
உலகினிலே அபகார மாகநேரும்
தப்பாது தொழில் முறையில் நஷ்டமாகும்
தயங்காமல் பத்துவார மிருந்திடாயே

உரை:-உனக்கு கெட்ட கிரகங்களெல்லாம் அதின் அதிகாரங்களை செலுத்தி வருவதால் அளவிலாத கஷ்டங்களையெல்லாம் காட்டும்; குடும்பத்தில் ஒரு கறுத்த மனிதனால் கலக முண்டாகும் கொடுத்ததை கேட்டால் அடுத்தாற்போல் விரோதமாகும். உபகாரம் செய்தாலும் அபகாரம் ஏற்படும் தொழிலில் நிந்தையான பெயரையும் நஷ்டத்தையு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மனகஷ்டத்தையும் தரும் இருந்தபோதிலும் பயமின்றி அஞ்சாதே இன்னும் பத்து வாரம் போகவேண்டும் அதன் பிறகு நன்மையளிக்கும் இது உத்தமம்.

## 32-வது பாட்டு

குருபகவான் ஒன்பதிலே இருக்க நன்றும்
குவலயத்தில் சுபகாரியம் முடிக்க நன்றும்
சிறுவர்களை பள்ளிதனில் சேர்க்க நன்றும்
சிறப்புடனே வியாபாரம் செய்ய நன்றும்
உருக்கமுடன் மனைகோல மிகவும் நன்றும்
வெளியூருக்குப் போகவும் லாபமுண்டாம்
பொருளதனை கொடுக்கவும் வாங்க நன்றும்
பிணி நீங்கும் மருந்துண்ண நன்மைதானே

உரை:-உனக்கு ஒன்பதாவது வீட்டில் குருபகவான் இருப்பதால் குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு மண காரியம் முடிக்கலாம் பாலர்களை பள்ளியில் சேர்க்கலாம் சொந்தமான வியாபாரமும் செய்யலாம் அல்லது புதியதொழிலுக்குப் போனாலும் லாபமுண்டாகும் பூமி வாங்கலாம் கிணறுதோண்டலாம் வீடு கட்டலாம் மாடு ஆடு கொள்ள பால் பாக்கியம் பெருகும் தேவலாயத்திற்கு யாத்திரை போகலாம் வியாபார விஷயமாய் வெளியூருக்குப் போகலாம் பொருளை கொடுக்கலாம் வாங்கலாம் வியாதியஸ்தர் மருந்துண்ணலாம் எல்லாம் நன்மையாகவே முடியும் அஞ்சாதே இது உத்தமம்.

## 33-வது பாட்டு

ஏழுதனில் சந்திரனு மிருப்பதாலே
எடுத்ததெல்லா முந்தனுக்கு பெருத்தலாபம்
சூழுமுந்தன் மைந்தர்களால் சுகமேயுண்டு
சொல் மொழிகள் தவராது நடந்தே தீரும்
வாழுமுந்தன் மனைதனிலே பொருள் கிடைக்கும்
வகைதப்பிச் சென்றவரும் வந்து சேர்வார்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாழுள்ள நோய் விலகும் நாளீ ரெட்டில்
பரம் பொருளி னருளுனக்கு மிகவுண்டாமே

உரை :-எண்ணிய எண்ணத்தினாலும் எடுத்த தொழில் முறையாலும் பெருத்த லாபத்தை யளிக்கும் தவிர மைந்தர்களாலும் சொந்த பந்துக்களினாலும்சந்தோஷமும்சமயோசிதமான உதவிகளும் உண்டாகும் நாணயந்தவராத சொல் லுறுதி ஏற்படும் பிறரை கேட்ட பொருளும் கிடைக்கும் மனையில் அதிஷ்டவசமான பொருள் கிடைக்கும் திசை மாறினவர்களும் வந்து சேர்வார்கள் வருத்தத்தையளிக்கும் நோயும் விலகும். ஆனால் இன்னும் 16-நாளில் உனது கஷ்டங்களெல்லாம் ஒழியும் இது உத்தமம்.

## 34-வது பாட்டு

சதுர்கோண கேதுபகை சதிக்குள்ளாக்கும்
சாராத குற்றமெல்லாம் சார்ந்தே தீரும்
பிதுர்சொத்து இருந்தாலும் பாழாய்ப்போகும்
பித்தமுடன் வாதசுரம்-தோஷங்காணும்
கதிகலங்கி காசியினில் நிற்கநேரும்
காதார துற்செய்தி கேட்கலாகும்
விதிபிசகா தானாலும் மதியைக்கொண்டு
விண்ணுலகில் வாரமெட்டு கழித்திடாயே

உரை:- உனக்கு கேது பகையாக இருப்பதால் தற்சமயம் கவலையே அதிகரிக்கும் பல பேர்களால் வீண் விபரீதமான குற்றங்களெல்லாம் ஏற்படும். பெரியோர்களின் பொருள்அழியும் நாளுக்கொரு நோய் காட்டும், பந்துக்களின் பகையும் தனது குடும்பத்தின் பகையும் மேலிட்டு மனது கலங்கி உன்னிடத்தில் நிற்கும்படியிருக்கும் சதா காலமும் கெடுதலான செய்திகளையே கேட்கும்படியாக இருக்கும் இதுகளனைத்தும் உனது புத்தியை கொண்டு நாளைக்கழித்து வர நாளுக்கு நாள் நன்மையுண்டாக்கும் ஆனால் 8-வாரம் போகவும் உன் கவலைகள் விலகும் இது மத்திபம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 35-வது பாட்டு

அன்புவியி லுந்தனிட கிரக மெல்லாம்
அனுகூல மாயிருக்க பயமேயில்லை
நம்பிய உன் னெண்ணமெலாம் பலிக்குமப்பா
நாட்டமிடும் வியாபாரம் விர்த்தியாகும்
கொம்பனையாள் தன்னாலே குடி விளங்கும்
குடும்பமதில் மனஸ்தாபம் விலகிப்போகும்
ஒன்பதுநாள் நவக்கிரக பூஜை செய்ய
ஒழியுமப்பா உனைபிடித்த பீடைதானே

உரை:-உனது கிரகங்களெல்லாம் உனக்கு அனுகூலமாக இருப்பதால் எவ்வித எண்ணமாயினும் ஒருவித இடையூறு மேற்படாது உன் குடும்பத்தில் மடிந்த ஒரு மங்கிலியஸ்திரியினால் குடும்பம்செழித்தோங்கும் கவலைகளும் கலகங்களும் விலகும் தொழிலில் நம்பிக்கையும் நாணயமும் நல்ல லாபமும் ஏற்படும் மனையில் ஓர் மாங்கல்ய காரியம் நடக்கும் கெண்டமும் நோயும் அண்டாமல் விலகும். வெளியூர் பிரயாணம் போக நன்மையுண்டு தவிர மனையில் செல்வாக்கும் பொன் பூஷண சிறப்பு மேற்படும், ஆனால் நவக்கிரகத்தை 9-நாளைக்குத் தவறாமல் பூஜை செய்துவர நாளுக்கு நாள் நன்மையுண்டாகும் இது உத்தமம்

## 36-வது பாட்டு

ஜெயமாகும் உன்மனதில் நினைந்த எண்ணம்
செல்வனே சித்தமது கலங்கிடாதே
துயர் கொண்டு பிரித்தவரும் வந்து சேர்வார்
துணை வியுடன் மாடுமனையோடு வாழ்வாய்
பயமான நோய் விலகும் பாலராலே
பாக்கியங்கள் நீ யடைவாய் பிற்காலத்தில்
கயிலாய நாதன் மைந்தன் சாக்ஷியாக
களிப்புறுவாய் இன்னுமைந்து நாளிற்குள்ளே

உரை:-உன் மனதில் நினைத்த எண்ணம் ஜெயமாகும் குடும்பத்தில் கலக்கப்பட்டுச் சென்றவர்களும் துலக்கமாக வந்து சேர்வார்கள் தவிர இல்லற வாழ்க்கையிலே நல்ல விதமாக மாடு மனை முதலியவைகளைக் கொண்டு தொல்லையின்றி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வாழ்வாய் புத்திர பாக்கியமுண்டாகும் நீடித்த, நோயா யினும் ஓடி மறையும் பிற்காலத்தில் புத்திரர்களால் நல்ல பலன்களை யெல்லாமடைவாய். ஆனால் இன்னும் ஐந்து நாளில் உனது மனத்துயர் நீங்கும் இது உத்தமம்.

## 37-வது பாட்டு

மனக்கோட்டை கட்டி நீ மகிழ்ந்திடாதே
　　மலைத்தவுடன் கிரகமெல்லாம் கொடியதாச்சே
உனை கெடுக்க வேணபே ருறவேயாவார்
　　உகந்து நீ செய்தொழிலில் நஷ்டங்காண்பாய்
வினையமுடன் வந்த நோய் வருத்தமாக்கும்
　　வேறிடத்தும் மாற்றி வைத்தும் கவலையாக்கும்
மனைவிமக்கள் சுற்றமும் உனை வெறுக்கும்
　　மாதமூன்று போன பின்னே மகிழுவாயே.

உரை:-உன் கிரகங்களெல்லாம் கொடியதாக இருப்ப தால் மனக்கலக்கத்தையும் அலைச்சல் திரிச்சலு முண்டாகும் பிறரை கேட்ட பொருளாயினும் உன் கைக்கு சிக்காது நீ நன்மையைச் செய்தபோதிலும் உனை கெடுக்க யோசிப்பார் கள் தவிர தொழிலில் நஷ்டமும் குடும்பத்திலே கஷ்டமும் பந்துமித்திரர்களால் நிஷ்டூரமும் பலவித குற்றமும் ஏற்படும் மனையில் பாம்பும் கீரியும் போலிருக்கும் இடம் விட்டு வேரிடத்திலும் மாற்றி கஷ்டப்படுத்தும் சொற்பமான நோயாயினும் பற்றருமல் பாதிக்கும் ஆனால் 3-மாதம் போன பிறகு மனம்போல் வாழ்வாய் இது மத்திபம்

## 38-வது பாட்டு

இடம் விட்டு இடம் போக எண்ணமுண்டு
　　இருந்தாலும் அதனால் லாபமுண்டு
திடமான பெரியோரால் நன்மையுண்டு
　　தென்மேற்கு திசையிருந்து செய்தியுண்டு
திடமதிலே உனது குறை வேணதுண்டு
　　தைரியமாய் எத்தொழிலும் செய்யநன்று
முடவனெனும் சனியனவன் விலகி விட்டான்
　　மூன்று நாள் போக பின்னே சுகமுண்டாமே



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உரை :-இடம் விட்டு வேறிடம் போகவும் எண்ணமிட்டிருப்பது நன்மையான காரியமாகும் அதனால் உனக்கு லாபமுண்டாகும். சில பெரியோர்களால் உதவியுண்டாகும் தென்மேற்கு திசையிலிருந்து நன்மையான செய்தி வரும் அதனால் வெகு லாபத்தை யடையக்கூடும்; எந்த விதமான தொழிலை வேண்டுமாயினும் செய்யலாம். அதனால் மேன்மையும் விருத்தியுமடைவாய் தவிர உன் மனதில் வேண்டிய குறைகளை வைத்திருக்கின்றாய், அக்குறைக்கு காரணமாயுள்ள சனியனும் விலகி ஒரு வாரமாகின்றது. 3 நாள் போக நன்மையுண்டாகும் இது உத்தமம்.

## 39-வது பாட்டு

பருதியது பத்தினிலே உதயமாச்சு
பகைவர்களின் பூண்டடியோ டொழியலாச்சு
வருத்தமே தந்தபிணி விலகலாச்சு
வருமையுடன் மனக்குறையு மற்றுபோச்சு
நிருபமது வெளியிருந்து வருகலாச்சு
நீ நினைத்த எண்ணமது ஜெயமுண்டாச்சு
பெருமைபெற உந்தனுக்கு காலமாச்சு
பேசுமப்பா வுன்வீட்டில் கெவுளிதானே

உரை:-உனக்கு பத்தாவது வீட்டில் சூரியனிருப்பதால் பலத்த லாபங்களெல்லாம் உண்டாகும் வஞ்சகர்களின் கூட்டம் ஒழியும் நோய்விலகும் உனது வறுமைகள் ஒழிந்து பெருமையளிக்கும் மனக்குறைகளும் விலகும் வெளியிலிருந்து நன்மையான சங்கதிகளும் வரும் வியாபாரம் விர்த்திகரமாகவுமிருக்கும் மனதில் நினைத்த எண்ணமும் பலிதமாகும் தவிர உனது கஷ்டங்கள் தீர்ந்ததற்கு அடையாளமாக உன் தலைக்குயரமாக வீட்டில் கெவுளியானது சொல்லும் இது உத்தமம்.

## 40-வது பாட்டு

சனியவன் வக்கிரித்ததால் சண்டைநேரும்
சகலவித காரியமும் தடங்கலாகும்
பணிவான மனிதர்களும் பகையேயாவார்
பலபொருளும் சேதமுண்டு களவேபோகும்
துணிவானே காரியத்தை செய்ய நேரும்
துன்பமிக நேருமப்பா வியாதியானும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கனிவான கடனாலே மனஞ்சலிக்கும்
கழிந்திடுவாய் நாற்பத்தி ஏழுநாளே

உரை:-சனி வக்கரித்திருப்பதால் சகல காரியங்களும் தடங்கலாகும், சொந்த பந்துக்களும் நிந்தனை புரிவார்கள். வைத்த பொருள் மறையும் பலவிதத்திலும் பொருள் சேதம் முன்பின் யோசிக்காமல் கொடுமைகளைச் செய்து துன்பத்தி லாழ்த்தச் செய்யும் சந்தேகிக்கும்படியான நோயிலீடுபடுத் தும் கடன்காரர்களின் தொல்லை பாதிக்கும் ஆனால் 47நாள் நவக்கிரகத்தை பூஜைசெய்தால் நாளுக்கு நாள் நன்மை தரும் இது மத்திபம்.

## 41-வது பாட்டு

வையத்திலுன் கவலை நீங்கலாச்சு
வைரிகளும் உனைக்கண்டு ஏங்கலாச்சு
கைவிட்டு போனபொருள் வருகலாச்சு
கன்னியர்க்கு மனைதனிலே கர்ப்பமாச்சு
பையவே வருத்தும் பிணி பறந்துபோச்சு
பாலகனே வெளியூரில் லாபமாச்சு
கைத்தொழிலும் வர்த்தகமும் ஓங்கலாச்சு
கருத்துடனே ஏழைகட்கு தருமஞ்செய்யே.

உரை:-இப்பொழுது உன் கவலைகளெல்லாம் நீங்கிவரு கிறது. உன் எதிரிகளும் அஞ்சுவார்கள்; கைவிட்டுபோன பொருள் வந்து சேரும் மனையில் மனையாளுக்கு கர்ப்பந்தரிக் கும் சில நாட்கள்ாக உன்னை கவலைக்குள்ளாக்கும் நோயா னது மணிமந்திர ஔடதத்தினால் நீங்கும் வெளியூரிலே சில நாளில் உனக்கு ஓர் லாபம் கிடைக்கும் வியாபாரமும் தொழி லும் விர்த்திகரமாக இருக்கும். ஆனால் ஏழைகளுக்கு தர்மஞ் செய்து வர. நாளுக்கு நாள் நன்மையை அளிக்கும் அஞ் சாதே உத்தமம்.

## 42-வது பாட்டு

மனதிலோர் எண்ணத்தை கொண்டு நீதான்
மாதமொன்றாய் கவலையுற்று வருந்துகின்றாய்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இனமுள்ளவோர் பெண்மணியின் கலகத்தாலே
இடையூறு மிகவுண்டுன் குடும்பந்தன்னில்
தனதான்யம் நிலபலமும் பொருளும் தோன்றும்
நிஷ்டூரமாக நின்றாய் உன் குடும்பத்தார்க்கு
தினமும் நீ நவக்கிரக பூஜை செய்தால்
தீவினைகள் தீர்ந்து சுகமடைவாய் தானே

உரை:-நீ மனதில் ஓர் எண்ணத்தை நினைத்து ஒரு மாதமாக கவலைப்படுகின்றாய் அந்த எண்ணம் உனக்கு முடியும் ஆனால் உன் குடும்பத்தில் ஒரு சிவந்த நிறமுள்ள பெண்மணியினால் கலகமேற்பட்டு வருகின்றது. இதற்கு முன்னும் சில பேர்களின் கலகத்தினால் பலவிதத்திலும் பொன் பொருள் நிலபலம் முதலானதும் தோற்று இருக்கலாம். ஆனால் நவக்கிரகத்தை பூஜை செய்வது நாளுக்கு நாள் உனது வினைகள் நீங்கி வாழ்வாய் இது மத்திபம்.

## 43-வது பாட்டு

ஒன்பதிலே புதபகவான் உனக்கமர்ந்த
உருதியினால் நினைத்த எண்ணம் பலிதமாச்சு
கண்ணியமாய் வாழ்ந்திடுவாய் கெண்டம்போச்சு
கடன்கொடுத்த பொருள் வரவும் காலமாச்சு
மண்மனையும் பொன்பொருளும் சேரலாச்சு
மாடாடு கொள்ளவும் பால் பாக்கியமாச்சு
துன்மார்க்கர் சகவாசம் வைத்திடாமல்
தொல்லுலகில் நல்விதமாய் வாழ்ந்திடாயே

உரை:-புத பகவான் ஒன்பதாவது வீட்டில் அமர்ந்திருப்பதால் உனது எண்ணம் முடியும் கண்ணியமான வாழ்க்கையும் கபடமற்ற சிநேகமும் கடன் கொடுத்த பொருள் வரவும் கனத்த தொழில் முறையும் அதனால் லாபமும் உண்டாகும் நோயும் கெண்டமும் நெருங்காமல் விலகும் பூமி வாங்கவும் மனை கொள்ளவும் போன பொருள் சேரும். மாடு ஆடு கொள்ள பால்பாக்கிய முண்டாகும் ஆனால் துன்மார்க்கரின் உறவை வையாதே அவர்களை விட்டு நீங்கினால் ஒருவித கவலையும் உண்டாகாது இது உத்தமம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 44-வது பாட்டு

பாம்பின்வாய் தேரைபோல் பதரிடாதே
பதட்டமாய் ஒருவரையும் நிந்திக்காதே
வீம்புகொண்டு குடும்பமதை வெறுத்திடாதே
வெகு கலகம் உன்மீது வரும் தப்பாதே
சோம்பல் கொண்டு செய்தொழிலை விட்டிடாதே
சித்தமது நோய் நொடியால் கலங்கிடாதே
ஆம் செவ்வாய் சனியாலே தோஷமுண்டு
ஆதரவாய் நவக்கிரக பூஜை செய்யே.

உரை:-உனக்கு அங்காரகனின் தோஷமும் அஷ்டமச் சனியன்பார்வையாதலால் அளவிலாத கஷ்டங்களைதான் காட்டும் இதன் காரணத்தினால் பாம்பின் வாயிலகப்பட்ட தேரைபோல் பதரி ஒருவரையும் நிந்தனை செய்யாதே கொடுமையின் மிகுதியால் குடும்பத்தை வெறுக்காதே பலவிதமான கலகங்கள் உன் குடும்பத்திலேற்படும் தொழிலும் நஷ்டமாகும் நோய் பாதிக்கும் இருந்தாலும்தைரியத்தை விடாமல் 40-நாளைக்கு நவக்கிரகந்தை பூஜை செய்துவர நன்மையுண்டாகும் இது மத்திபம்.

## 45-வது பாட்டு

அலக்ஷியமாய் நினைத்த தெல்லாம் அதிர்ஷ்டமாச்சு
அஷ்டமத்தில் புதபகவான் அமரலாச்சு
துலக்கமுள்ள பெரியோர்களுதவியாச்சு
துன்பமெலா முனைவிட்டு அற்றுபோச்சு
நலம் பெறவே வலது பக்கம் மச்சமொன்று
நக்ஷத்திரம் போலுனக்கு அமையலாச்சு
கலக்கமிலா லக்ஷிமியின் கருணையாலே
கண்டிடுவா யிருபத்து நாளிலுண்மை

உரை:-புதன் அஷ்டமத்திலமர்ந்திருப்பதால் உனது கவலைகளெல்லாம் விலகும் தவிர தொழிம் முகாந்திரத்தில் லாபமும்மாடு மனையுடன் மனைவி மக்களுடன் சுகக்ஷேமத்துடன் வாழ்வாய் பால் பாக்கியமும் பலவிதலாப முண்டாம் மனையில் மணங்கூடும் பெரியோர்கள் சவகாசமும்பேருதவியும் பலவித பொருளும் லக்ஷிமியின் கடாக்ஷமுமுண்டாகும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நோய் நொடி பாதிக்காது 20 நாளில் உனது இடையூறுக ளெல்லாம் விலகும் இதற்கடையாளம் உன் வலது பக்கம் மச்சமிருக்கும் இது உத்தமம்.

## 46-வது பாட்டு

உலகிலே நீ யடையாத துன்பமில்லை
 உறன் முறையா லுந்தனுக்கு உதவியில்லை
நலமொன்றும் குடும்பத்தி லடைந்ததில்லை
 நஷ்டமே யடைந்த பொருள் கணக்கே யில்லை
மலைத்தவுடன் மனநோய்க்கு மருந்தேயில்லை
 மனைவி மக்களாலுனக்கு மகிழ்ச்சியில்லை
கலக்கமது உனைவிட்டு போவதில்லை
 கண்டிதமாய் நவமாதம் கழித்திடாயே

உரை: இதுவரையில் நீ அதிக கஷ்டங்களை யடைந் திருக்கின்ருய், குடும்பத்திலும் சுகமடைந்த தில்லை பந்துக் களாலும் உதவி பெற்றதில்லை நஷ்டமடைந்த பொருளுக்கும் அளவில்லை மனைவி மக்களால் சந்தோஷமில்லை மனவேதனை யினுல் வந்த நோயிற்கு மருந்தில்லை இந்தக் கவலைகளெல் லாம் 9-மாதம் வரையில் உனை விட்டுப்போக வழியில்லை. ஆனுலும் 28-நாளைக்கு நவக்கிரகாதிகளை பூஜை செய்து வர நாளுக்கு நாள் நன்மையுண்டாகும் இது மத்திபம்.

## 47-வது பாட்டு

கிரகத்தின் தோஷமெல்லா மொழிந்து போச்சு
 கீர்த்தியுடன் எண்ணமது பலிதமாச்சு
உரமிகுந்த பந்துக்களால் உதவியாச்சு
 உன்னுடைய வியாபாரம் லாபமாச்சு
சிரமமிகும் நோய்விலகும் காலமாச்சு
 சிக்கனமாய் பிக்குகளும் ஒழியலாச்சு
தரணிதனில் தழைத்தோங்கி வாழலாச்சு
 தாட்டிகமாய் நாளேழில் சுகமுண்டாச்சே

உரை:-உன் கெட்ட கிரகங்களெல்லாம் விலகிவிட்டது இனி பந்துக்களால் உதவியுண்டு பலிவித கவலைகளும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நோயும் சிக்கலான வழக்குகளும் தொல்லைகளும் விலகும் தொழிலில் நம்பிக்கையும் நாணயமும் நல்ல லாபமுண்டாகும் இக்கட்டுகளின்றி குடும்பத்தில் சிக்கனமாக வாழ்வாய் மனை யில் மங்களமான காரியங்கள் நடக்கும் மனை கொள்ளவும் நாற்கால் ஜீவன் கொள்ளவும் குடும்பம் செழித்தோங்கும் 7 நாளில் கவலைகள் நீங்கி நினைத்த எண்ணம் பலிதமாகும் இது உத்தமம்.

## 48-வது பாட்டு

உந்தனிட எண்ணமெல்லாம் உறுதியாச்சு
உடன் பிறந்தோர் பந்துக்களால் உதவியாச்சு
சொந்தமான உன் தொழிலில் லாபமாச்சு
சுந்தரியால் உன் குடும்பம் செழிக்கலாச்சு
மந்தமதியுள்ளோரின் நேசம் போச்சு
மகாநோயும் தீர்ந்துமணம் கூடலாச்சு
ஏந்தமுகம் போலும் தங்கமுகமாச்சு
ஏழைகட்கு தர்மம் செய்வாய் ஈசன் சாக்ஷி

உரை: உன் எண்ணங்களெல்லாம் உறுதியாக முடியும் சகோதரர்களாலும் சொந்த பந்துக்களாலும் உதவியுண்டா கும். நீ செய்யும் தொழிலில் லாபமுண்டாகும். உன் மனைவி யினுல் உனது குடும்பத்தில் லக்ஷிமிகர முண்டாகும். உனை கெடுக்க யோசிக்கும் வஞ்சகர்களின் உறவும் போய் விட்டது; நோயும் தீர்ந்து போகும்: மனையிலே மாங்கல்யம் கூடும் எந்த முகம் போனுலும் தங்கமுகமாக தோன்றும் ஆனுல் ஏழைகளுக்கு தானதர்மம் செய்யவும் இது உத்தமம்.

## 49-வது பாட்டு

அப்பனே வருடமொன்ருய் கஷ்டப்பட்டாய்
அதற்குமுன்னும் வெகுநாளாய் கவலையுற்ருய்
செப்பவே மாதமொன்று சென்றதானுல்
சித்தத்தில் நினைத்த எண்ணம் ஜெயமேயாகும்
தப்பாது உன்வாக்கு தொழிலுமோங்கும்
தனலாபம் மிகவுண்டு நலியும் நீங்கும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஒப்பில்லா மணங்கூடும் மகப்பேராகும்
உலகமதில் அகஸ்தியனுர் உரைத்தவாக்கு

உரை:- நீ வெகு நாளாக கஷ்டமும் நஷ்டமும் மேலிட்டு கவலையால் மெலிந்து வாடுகின்ருய் அல்லலும் ஒருவருடமாக படமுடியாத துன்பங்களையும் பலவித வம்பு வழங்குகளையும் பொருள் விறையங்களையும் அடைந்து வருகிருய் ஆனுலும் அந்த கஷ்டங்களெல்லாம் இம்மாதம் போக விலகும் அதன் பிறகு நல்ல யோகத்தையும் சுக க்ஷேமத்தையுமளிக்கும் நோய் நீங்கும் பிறரைக் கேட்ட பொருள் கிடைக்கும் தொழில் ஓங்கும் மனையில் திருமணம் கூடும் புத்திர சம்பத்துண்டாம் மத்திபம்.

## 50-வது பாட்டு

நினைத்து நீ எடுத்த தொழில் பலிக்குமப்பா
நிச்சயமாய் புவிதனிலே அடைவாய்லாபம்
உனைகெடுக்க வேணபேர் கூடிருலும்
உறவற்ற அவர்கூட்ட மொழிந்துபோகும்
சினந்தவிர்த்து உந்தன்குல தெய்வந்தனை
சிறப்புடனே பூஜையது செய்வாயாகுல்
கணமுடனே உலகமதில் வாழ்வாயென்று
கலக்கமிலா குருமுனியும் உரைத்திட்டாரே

உரை:- நீ நினைத்து எடுத்த தொழில் பலிதமாகும் குபேர சம்பத்துடன் வாழ்வாய் ஆனுல் உன்கெடுக்க வேண பேர் நினைத்தபோதிலும் அவர் கூட்டமேழுண்டோடொழிந்துப் போகும் நீ அதைப் பொருட்படுத்தாமல் உன் வீட்டில் மடிந்த குலதெய்வங்களை வெள்ளிக்கிழமைகளில் பூஜை செய்துவர குடும்பம் செழிக்கும் மனக்கவலை விலகும். புத்திர சம்பத்துண்டு நோய் நீங்கும் இப்பொழுது நினைத்த எண்ணமும் ஜெயமாகும் இது உத்தமம்.

## 51-வது பாட்டு

கேது சனிராகுனக்கு பகைதானப்பா
கெடுதியுண்டு வாழ்வினிலே மனக்கிலேசம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வாதுகளும் வம்புகளும் வந்தே தீரும்
வகை தப்பி இடத்தை விட்டு மாற்றி வைக்கும்
மாது மக்கள் பந்துக்களும் உனை வெறுப்பார்
மனது வைத்து செய்வதெல்லாம் நஷ்டமாகும்
ஏதுயினி செய்வதென மெய்ங்கிடாதே
இடஞ்சலெல்லாம் தீருமப்பா வாரமாறில்

உரை:-சனி ராகு கேதுபகையாக இருப்பதால் குடும்பத்தில் பலவித கவலைகளேற்படும் எடுத்ததற்கெல்லாம் வம்பு வழக்குகளை யுண்டாக்கும் இடம்விட்டு வேறிடத்தில் மாற்றி வைக்கும் நோயின் கவலையே நெஞ்சம் துடிக்கும் பந்துக்களின் விரோதமும் சினேகிதர்களால் நிஷ்டூரமு மேற்படும் நீ இஷ்டங் கொண்டு செய்யும் தொழிலில் நஷ்டங் காட்டும் அதனால் மனக்கஷ்ட மேற்படும். ஆயினும் இக் கஷ்டங்களெல்லாம் 6-வாரம் போக அனுகூல முண்டாகும் இது மத்திபம்.

## 52-வது பாட்டு

கஷ்டமே துலைந்து ஜெய காலமாச்சு
கந்தநாதன் கிருபை யுனக்குண்டாச்சு
நஷ்டமெல்லா மொழிந்து நன்மையாச்சு
நலம் பெறவே குடும்பமதில் சுகமுண்டாச்சு
இஷ்டம் போல் தொழில் முறையில் லாபமாச்சு
இனத்தினிலே கலியாணம் கூடலாச்சு
அஷ்டலக்ஷ்மி உன் மனையில் வாழலாச்சு
அதனாலே வேண பொருள் சேரலாச்சு

உரை:-உனக்கு ஜெயகால மேற்பட்டிருப்பதால் இனி உன் கஷ்டங்கள் விலகும் கந்தநாதனின் கருணையால் நஷ்டப்பட்ட பொருள்களும் சிலது வந்து சேரும் குடும்பமும் செழிக்கும் தொழில் முறையிலே அளவிலாத லாபமும் அதிர்ஷ்டவசமான அமைப்புகளும் சொந்தத்தில் விவாக காரியமும் நடக்கும்படியான அம்சம் உண்டாகும் இன்று முதல் அஷ்ட லக்ஷிமிகளும் உன் மனையில் வாழ்வார்கள்



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அதனால் வேண்டிய பொன் பூஷணங்கள் சேரும், நினைத்த எண்ணம் பலிதமாகும் இது உத்தமம்.

## 53-வது பாட்டு

விதிப்பயனிதுவென்று நொந்திடாதே
உதித்ததொரு கிரகத்தின் கோளாரிதே
நிதியின்றி முன்கோபம் நீதான் கொண்டு
நிகழ்த்தொண்ணு பல செயலி லீடுபட்டு
மதியிழந்தாய் பொருளிழந்தாய் தொழிலிழந்தாய்
பரதேசிபோல் மனது கலங்கி நின்றாய்
சதியில்லை மாதம் மூன்று சென்றதானுல்
சாதிப்பாய் பலவிதத்தில் ஜெயமே தானே

உரை:-உன் கெட்ட கிரகத்தின் கோளாறுகள் உன்னை வறுத்துகின்றது. ஆதலால் இது விதிப்பயனென்று வருந்தாதே நீ வணங்கும் தெய்வங்களையும் பெற்றோர்களையும் நிந்தனை செய்யாதே இதற்கு முன்னும் உனது முன் கோபத்தினுல் பலவிதமாக இடம் விட்டும் பிரிந்திருக்கலாம் கைப்பொருளும் அழிந்திருக்கலாம் தொழிலும் நஷ்டம் தற்போது நிரபராதியாக கலக்கமுறுகின்றாய் இருந்தாலும் அஞ்சாதே 7-வருஷங்களாக நீ கஷ்டங்களை யடைந்து வருகின்றாய் இன்னும் மாதம் 3-போக எக்காரியத்திலும் சித்தியடைவாய் இது மத்திபம்.

## 54-வது பாட்டு

சந்தேகம் கொள்ளாதே சாற்றுவேன் கேள்
சண்முகனின் பாதமலர் சாக்ஷியாக
உந்தனிட எண்ணமெல்லாம் முடியுமப்பா
உன்மனையில் வேணபொருள் சேருமப்பா
ன்மையுள்ளோர் உனக்குதவி யாவரப்பா
தாட்டிகமாய் வியாபாரம் தழைக்குமப்பா
தொந்திரவும் துணை நோயும் துலையுமப்பா
துதித்திடுவாய். உந்தன்குல தெய்வந்தன்னை

உரை:-அப்பனே சந்தேகப்படாதே ஷண்முகன் சாக்ஷியாக இனியுன் சங்கடங்களெல்லாம் ஒழியும் சஞ்சலம் தீரு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சாதித்த எண்ணம் தட்டங்கலின்றி ஜெயமாகும் தனலாபமுண்டாகும் தழைத்த குடும்பமானது செழித்து ஓங்கும் தன்மையுள்ள பெரியோர்களின் உதவியானது சேரும் தொழில்முறை தீதின்றி லாபங்கிடைக்கும், கடன் தொல்லையும் கொடிய நோயும் தொலையும்; ஆனால் சோமவார விரதமிருந்து உன் குல தெய்வத்தை துதித்து வர மிகுந்த க்ஷேமமடைவாய் உத்தமம்.

## 55-வது பாட்டு

இரண்டிலே சந்திரனு மிருக்கதீதாம்
 இன்பமுடன் மணமாலை சூட்டதீதாம்
விறையமுண்டு மாடுமனை வாங்க தீதாம்
 வெளியூர்க்கு சென்றாலும் மிகவும் தீதாம்
தரணிதனில் கொடுத்த கடன் கேட்க தீதாம்
 தந்துவமாய் வியாபாரம் செய்யுதீதாம்
உரமான சினேகிதரால் உனக்கே தீதாம்
 உத்தமனே வாரமைந்து கழித்திடாயே

உரை:-உனக்கு இரண்டாவது வீட்டில் சந்திரனிருப்பதே கொடியதாகும் மனையில் விவாகம் நடத்தப்படாது மாடுமனை கொண்டபோதிலும் விர்த்தியில்லை வெளியூருக்குச் சென்றாலும் கஷ்டமுண்டு கொடுத்த கடனை கேட்க பகை ஏற்படும் வியாபாரத்திலும் நஷ்டம் அன்புள்ள சினேகிதரானாலும் அவர்களால் உனக்கு தீங்கு விளையும் ஆனாலும் தைரியத்தை விடாதே 5-வாரம் அதிஜாக்கிரதையுடன் நடந்துக் கொண்டால் பின்னால் சுகப்படுவாய் இது மத்திபக்.

## 56-வது பாட்டு

எண்ணிய எண்ணமெல்லாம் பலிக்குமப்பா
 எத்தொழிலை செய்தாலும் லாபமப்பா
உன் மனதின் கவலையெல்லாம் தீருமப்பா
 உடன் பிறந்தோர் பந்துக்களால் உதவியப்பா
வண்ணப் பகையாள ருரவா வாரப்பா
 வந்தநோய் வழிவிலகி நிற்குமப்பா
நன்மையுடன் பலபொருளும் சேருமப்பா
 நாற்பத்தி ரெண்டு நாளில் நலமுண்டாமே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உரை:-உனது எண்ணமெல்லாம் இடையூரின்றி பலித மாகும் எத்தொழிலை செய்யினும் லாபமுண்டு பந்து மித்திரர் களுதவியும் பகையாளருறவும் கூடும் வந்த நோய் விலகும் கொண்ட பெண்ணினல் குடும்பம் விர்த்தியாகும். பந்துக் களில் ஒருவரால் பலபொருள்கள் கிடைக்கும் மனையில் ஆடையா பரணச் சிறப்புண்டாகும் வெளியூரில் லாபம் கிடைக்கும் உன் மனக்கவலைகள் 42-தினத்தில் ஒழியும் உத்தமம்.

## 57-வது பாட்டு

ஆறிலே சூரியனு மிருப்பதாலே
அனுகூல மாகும்ப்பா உனதுயெண்ணம்
போரிலே நின்றாலும் ஜெயமேயுண்டு
போன பொருள் தவணையின்றி வந்துசேரும்
கோரிய வியாபாரம் லாபங்காணும்
கோவுடனே மனைகோல பாக்யமுண்டாம்
பாரிலே பதிமூன்று நாட்கு பின்னே
பலவிதத்தில் சந்தோஷ மடைகுவாயே

உரை:-உனக்கு ஆறுவது வீட்டில் சூரியனிருப்பதால் யாது காரியமாயினும் அனுகூலந்தான் போர் முனைக்குச் சென்றாலும் புகழும் கீர்த்தியும் கைவிட்டுப்போன பொருளா யினும்தவணையின்றி வந்துசேரும் வியாபாரத்தில் அளவற்ற லாபத்தை யடைவாய் நாற்கால் ஜீவன் கொள்ள பால் பாக்கியமுண்டாகும். வீடு கட்டவும் யாத்திரை செல்லவும் தன்மை யுண்டாகும். இன்னும் 13-நாளைக்குள் உனது கஷ்டங்களெல்லாம் நீங்கும் இது உத்தமம்.

## 58-வது பாட்டு

குருமுனியின் வாக்கியந்தான் பிசகாதப்பா
குறித்துள்ள எண்ணமது பலியாதப்பா
ஒருவரிட சொல்கேட்க லாகாதப்பா
உடன் பிறந்தோர் பந்துக்களும் பகைப்பாரப்பா
தருமமே செய்தாலும் வருமையப்பா
தரித்திரத்தால் பொருள் விரைய மாகுமப்பா
ஊருமாறி ஊரை விட்டும் ஓட்டுமப்பா
உத்தமனே ஒருமாதம் கழித்திடாயே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உரை:- உனக்கு கெட்ட கிரகத்தின் கோளாறினலே குடும்பத்திலும் தொழில் முறையிலும் சிநேகிதத்திலும் கொடுக்கல் வாங்கலிலும் கவலையுண்டாகும் ஒருவர் சொல்லை யும் தப்பாதே இடம் விட்டு வேறிடத்திலும் மாற்றி வைக்கும் நிதர்மத்தை நினைத்தாலும் அதர்மமே ஏற்படும்கைப்பொருள் விரையமாக்கும் பகைவர்களுக் கஞ்சும்படியாகும். ஆனல் நவக்கிரகத்தை பூஜை செய்துவர நாளுக்கு நாள் நன்மை யுண்டாகும் ; மாதம் போக உன் கவலைகள் நீங்கும் இது மத்திபம்.

## 59-வது பாட்டு

அஞ்சாதே கேளுமப்பா ஆருடத்தை
 அனுதினமும் தோத்தரிப்பாய் நவக்கிரகத்தை
சஞ்சலங்கள் விலகுமப்பா தனமே சேரும்
 தட்டாது உன் வார்த்தை மேன்மையாகும்
கொஞ்சநாள் இதுவரையில் கஷ்டப்பட்டாய்
 கோபத்தால் பலபொருளும் நஷ்டப்பட்டாய்
வஞ்சகக் காரர்களால் வருத்த முற்ருய்
 வழுத்தினேன் இவ்வாரம் கழியத்தானே.

உரை:-அப்பனே அஞ்சாதே கொஞ்ச நாளாக வெகு கஷ்டங்களை யடைந்து வருகிருய் கோபத்தினுல் பொருள் களையும் நஷ்டமடைந்தாய் துன்மார்க்க சிநேகிதர்களால் சஞ்சலங்களை யடைந்தாய் ஆயினும் நவக்கிரகத்தை நாள் தோறும் சென்று பூஜை செய்துவர உனது கவலைகள் நீங்கும் தனலாபம் உண்டாகும். எவ்வித காரியத்திலும் உனது காரியமே மேன்மையடையும். இவ்வாரம் போக உனக்கு அளவற்ற க்ஷேம லாபத்தைத் தரும் இது உத்தமம்

## 60-வது பாட்டு

வருத்தமே யுந்தனுக்கு அதிகமாகும்
 வையகத்தில் நினைப்பதெல்லாம் அபலமாகும்
பொருத்தமுடன் செய்தொழிலில் நஷ்டமாகும்
 புவிதனிலே மனைவிமக்கள் பகையதமாகும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy.

கருத்துள்ள மனைதனிலே கலகமாகும்
கச்சிதமாய் வைத்த பொருள் களவுபோகும்
தரித்திரமே மேலோங்கும் சினேகம் நீங்கும்
தணியுமப்பா நாளுக்கு நாள் தான் பாரே

உரை:-உன் நல்ல கிரகங்களெல்லாம் நீச்சம் பெற்றிரு பதால் மனக்கவலையே அதிகரிக்கும் செய்யும் தொழிலி நஷ்ட மடையும் மனைவி மக்களும் பகையார்கள் ஓர் கன்ன கையால் குடும்பத்தில் கலகமேற்படும் மனையில் கள போகும் வைத்த பொருள் மாயமாய் மறையும் தவிர தரித்தி திசையே மேலுக்கு மேலோங்கும் உன்னுடைய வாக் பிறருக்கு விஷம் போல் தெரியும். ஆனால் நாளுக்கு நா உன் கவலைகள் நீங்கும் அஞ்சாதே இது மத்திபம்.

## 61–வது பாட்டு

யோகதிசை வுந்தனுக்கு வந்ததாலே
ஒன்பதிலே குருபகவான் பார்வையாச்சு
தோகையரால் லாபமுண்டு துயரம்போச்சு
துரைத்தனத்தி லுந்தனுக்கு தொழிலுண்டாச்சு
பாகமாய் வந்தபிணி பதுங்கலாச்சு
பலவூர்கள் செய்தியதால் பாக்யமாச்சு
ஆகமத்தின் மொழிதுதான் உண்மையாச்சு
அறிவித்தேன் அருள்வாக்கை அறிகுவாயே

உரை:-இப்பொழுது உனக்கு யோக திசை வந்திருப் தாலும் ஒன்பதாமிடத்தில் குரு பார்வை பெற்றிருப்பதாலு கொண்ட பெண்ணினால் உனக்கு வேண லாபமுண் துரைத் தனத்தாரால் உத்தியோக பலமும் உண்டாகும் ப ஊர்களிலிருந்து லாபமும் சந்தோஷமு மளிக்கும் கவலை யளிக்கும் நோயானது மாயமாய் போகும் இது வே வாக்கானதால் ஒருவித கவலையுமிருக்காது இன்னல்கள் யளிக்காது சுகத்தையளிக்கும் இது உத்தமம்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 62-வது பாட்டு

பனிரெண்டில் சூரியனும் உதித்தாலே
பலபேர்களா லுனக்கு உதவியுண்டு
பணயணிகள் சேருமப்பா பலத்த லாபம்
பாவையர்க்கு கெர்ப்பமதில் பாலனுகும்
துணிந்து நீ எத்தொழிலை செய்தபோதும்
தொல்லை யின்றி விர்த்திகர மாகுமப்பா
தணியுமப்பா உந்தனிட கஷ்டமெல்லாம்
தட்டாமல் ஒன்பது நாள் கழித்திடாயே

உரை :-உனக்கு பனிரெண்டில் சூரியனிருப்பதால் பல பேர்களாலுனக்கு உதவியுண்டாகும் வெகு மேன்மையான பணியணிகள் சேரும் பலவித லாபமுண்டாகும் மனையில் ஆண் குழந்தை தரிக்கும் எந்த தொழிலை செய்த போதும் தொந்தரையிராது இன்னும் ஒன்பது நாள் போக உனது கஷ்டங்களெல்லாம் படிப்படியாக விலகும் நினைத்துள்ள எண்ணமும் பலிதமாம் இது உத்தமம்.

## 63-வது பாட்டு

பொல்லாத சனிராகு பலகையினுலே
போகுமொரு காரியங்கள் தடங்கலாகும்
நில்லாது பலவிதமாய் அலையச் செய்யும்
நிஷ்டுரச் சிநேகிதரால் கவலையாகும்
நல்லதைச் சொன்னுலும் பொல்லாப்பாகும்
சொல்லாதே சொன்னுலும் பொல்லாப்பாகும்
சுகமுண்டு அகஸ்தியனுர் சுருதிபோல

உரை:-நீ எவ்வித எண்ணத்தை நினைத்தாலும்தடங்கல் அலைச்சல் திரிச்சல் அமோகமான நஷ்டங்களு முண்டாகும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சிநேகித விரோதமும் கவலையும் தொழிலில் நிந்தனை நல்லதைச் செய்தாலும் பொல்லாப்பும் கைப்பொருள் விரயமும் கொடிய நோயும் பில்லி சூனிய தொடர்பும் ஏற்படு தவிர உன் வாக்கு பிறருக்கு விஷம் போல் தெரி ஏனெனில் உனக்கு சனி ராகு பகையானதால் 48 நா போக நன்மையுண்டாகும் மத்திபம்.

## 64-வது பாட்டு

அகஸ்தியனார் கூறியதோர் வாக்கியத்தை
யாருமே நம்பிமோசம் போனதில்லை
சுகத்தைத்தரும் குடும்பத்தின் கஷ்டந்தீரும்
சுபக்கிரக பார்வையினால் லாபமுண்டாம்
மக்கட்பேரும் சுகவாழ்வும் பகையும் நீங்கும்
மண்ணதனை எடுத்தாலும் பொன்னதாகும்
ஜெகத்தினிலே எதிரின்றி செழித்துவாழ்வாய்
தியாகராஜன் குகனருளால் செப்பினேனே

உரை:-இந்த அகஸ்தியரின் ஆருடத்தை நம்பி யாரு மோசம் போனதில்லை குடும்பக்கவலை நீங்கும் கொடுமைக விலகும் நாள்தோறும் நவக்கிரகத்தை யார் பூஜை செய் வருகின்றார்களோ அவர்களுக்கு சுகமான வாழ்வும் தொழி வுயர்வும் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகவும் தோன்து எதிரி யில்லாமல வாழக்கூடும் இது மிக உத்தமமானது.

அகஸ்தியர் ஆருடம் முற்றிற்று

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஸ்ரீ வேலுமயிலுந் துணை

அகஸ்தியர் முனிவர் அருளிச்செய்த

# பாய்ச்சிகை சாஸ்திரம்

ஓர் மரக்கட்டையை பாய்ச்சிகை போல் வெட்டி அதை நன்றாய் தேய்த்து அதில் பாய்ச்சிகைக்கு எப்படி லக்கம் போட்டு இருக்கிறதோ அதைப்போலவே முதல் கட்டத்தில் 1, இதைப் போலவே 2வது கட்டத்தில் 2 இதை போலவே மூன்ருவது கட்டத்தில் 3 இதைப் போல் நாலாவது கட்டத்தில் ০ போட்டு வைத்துக் கொண்டு நன்மை தீமை கேட்க வருபவரிடம் கொடுத்து பாய்ச்சு கையை மூன்று தரம் உருட்டச் சொல்லி மூன்று முறையில் வரும் எண்களைக் காகிதத்தில் குறித்துக் கொண்டு அதைப் போலவே இருக்கும் எண்களுடைய பாடல்களைப் பார்க்கவும்.

1-1-1

மும்முறை யொன்றே வந்தால் முடித்திடும் நினைத்த
எண்ணம்
அம்புவி பூதநீயும் அரசனைப் போலவே வாழ்வாய்
வம்பு சூனியமும் நீங்கும் பலவித லாபமுண்டாம்
தம்பிரான் சாக்ஷியாக தாக்ஷிதா னில்லைபாரே

(இ-ள்) மூன்று முறையும் ஒன்று விழுந்தால் எண்ணம் முடியும் மன்னன்போல் வாழ்வாய் வம்பு சூன்யம் நீங்கும் பலவிதத்தில் லாபமுண்டு ஒருவித கவலையும் ஏற்படாது எ-று

1-1-2

பாரப்பா ஒன்று மொன்றும் பதரியே இரண்டும் வீழ்ந்தால்
சீரது யழிந்து போகும் சிக்குகள் பலவுண்டாகும்
பேரது கெடுக்கவுந்தன் பெண்டிரும் துணையேயாவாள்
கூரவே நினைத்தயெண்ணம் கூடாது நாள்தானுமே

(இ-ள்) ஒன்றும் ஒன்றும் இரண்டும் விழுமானல் உன் குடும்பத்தின் சீரழிந்து பல சிக்குகள் உண்டாகும் உன் பெயரை கெடுக்க உன் மனைவியே துணையாக இருப்பாள் நீ நினைத்த எண்ணமும் முடிவதற்கு வெகுநாள் போக வேண்டும் எ-று.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 1-1-3

தானும் ஒன்றும் விழ்ந்து தனித்தொன்று மூன்றும் (விழ்ந்தால்
ஆணாக பிறக்கும் பிள்ளை அதனாலே யோகமுண்டாம்
வீணான கவலையெல்லாம் விலகிடும் கெண்டம் நோயும்
சேராது கஷ்டம் நீங்கும் துணையது முருகனுண்டாம்

(இ-ள்) முதலில் ஒன்று விழுந்து மறுபடியும் ஒன்றும் மூன்றும் விழுமானால் மனையில் ஆண்குழந்தை பிறக்கும் அதனால் அதிர்ஷ்டம் பெருகும் ஆபத்துகள் விலகும் கெண்டமும் நோயும் நீங்கும் முருகனின் கருணையால் கஷ்டம் நீங்கும் எ-று.

## 1-1-6

உண்டப்பா கெடுதியுண்டு ஒன்றுடனொன்று மாதம்
நின்றிட விழுகுமானால் நிலைக்காது நினைத்த எண்ணம்
அன்றியும் அரசராலே அவகேடு வந்து நேரும்
சென்றிடும் செல்வமுற்றும் சொல்வது விஷம்போலாமே

(இ-ள்) ஒன்றின் பின் ஒன்றும் ஆறும் விழுமானால் உனது எண்ணம் பலிதமாகாது அரசாங்க விரோதமும் அதனால் பலவிதத்தில் பொன் பொருள் விரையமும் உண்டாகும் தவிர வாக்கு விஷம் போலிருக்கும் எ-று

## 1-2-1

விஷபாம்பைபோலே பார்ப்பார் ஒன்று ரெண்டொன்று (விழ்ந்தால்
பசப்பு வார்த்தைகள் பேசி பறிப்பாருன் பொருளையெல்லாம்
நிஜமாக உரைத்திட்டாலும் நியாயமு முனக்கிராது
கசங்கிட கடனின் தொல்லை காட்டிடும் கவலையாமே

(இ-ள்) ஒன்று இரண்டு ஒன்று விழுமானால் உனை கண்ட பந்தக்களும் சினேகிதர்களும் பாம்புபோல் பார்ப்பார்கள் பல விஷயத்தில் நயவஞ்சகமாக பேசி உன் பொருளை பறிப்பார்கள் நீ உண்மையை உரைத்தால் உறுதியாக இருக்காது கடன்காரர்களின் தொல்லையும் காட்டும் எ-று.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 1-2-2

கவலையேன் ஒன்றும் ரெண்டும் இரண்டுமே விழுதமானல்
தவணையில்லாமல் தான் சென்ற பொருளும் ஜீவன்
குவலயந் தன்னிலுந்தன் குணத்தை பாராட்டுவார்கள்
துவக்கிடும் நோயும் நீங்கு துணையாலே சகாயம்

[இ-ள்] ஒன்றும் இரண்டும் விழுந்தால பலவிதமான லாபமுண்டாம் கைவிட்டுப்போன பொருளாயினு ஜீவனுயி னும் தவணையில்லாமல் 8-நாளைக்குள் வந்துசேரும் உன்னை மிகவும் நல்லவனென்று புகழ்வார்கள் ஆரம்பமாகும் நோயும் நீங்கும் சிநேகிதர்களால் உதவியுண்டாகும் எ-று

## 1-2-3

சசாயத்தால் அபாயம் நேரும்சரியொன்றுமிரண்டும்மூன்றும்
விகாரமாய் தோன்றுவாய் நீ வீண்பெய ரெடுக்கலாகும
அகாலமாம் மரணசேதி அர்பனே கேட்பாய் நீயும்
சுகாசுகமிழந்த போதும் தைரியந்தனை விடாதே

[இ-ள்] ஒன்றும் இரண்டும் மூன்றும் விழுந்தால் உன் கிரகக் கோளாறினல் உன் முகமே விகாரமாகத் தோன்றும் வீண் நிந்தையான பெயரெடுப்பாய் சகாயம் செய்தாலும் அதனுல் அபாயமுண்டாகும் சொந்த பந்துக்களில் திடீரென மரண செய்தியும் கேட்பாய் தவிர உனது சுகம் முற்றும் துறந்தாலும் தைரியத்தை விடாதே எ-று

## 1-2-6

தைரியத்தை விடாதே தனியொன்றும் மிரண்டுமாறும்
வைரியா யிருந்தாலும் வணங்குவா ருன்னைக்கண்டால்
சௌரியத் தொழிலில்பாபம் சஞ்சலம் பிணியும் நீங்கும்
பரிவுடன் பிறக்கும் பிள்ளை பலித்திடும் அதனுல் யோகம்

[இ-ள்] ஒன்றும் இரண்டு ஆறும் விழுந்தால் பகையாயி ருப்பவர்களும் உறவாக வந்து சேருவார்கள் தொழிலில்மேன் மையான லாபமும் பிணியும் கெண்டமும் பலவித கவலையும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தீங்கும் சில நாளையில் ஆண் குழந்தை பிறக்கும் அதனுல் லாபமுண்டாகும் எ-று

## 1-3-1

யோகமுண்டு ஒன்றும் மூன்றும் உடனென்றும்விழுகுமானுல்
ஏகமாய் பொருள்கள் சேரும் இடரின்றி யெண்ணங் கூடும்
சாகவே வாய்த்த நோயும் சுகமாகும் மருந்தினுலே
வேகமாய் செய்திதோன்றும் வியாபாரம் விர்த்தியாமே.

[இ-ள்] ஒன்றும் மூன்றும் ஒன்றும் விழுந்தால் நல்ல யோக பலாபலன்களைத் தரும் வேண்டிய பொருள் சேரும் எண்ணம் பலிக்கும் மரணமாகச் வந்த நோயும் மருந்தினுல் தீங்கும் நன்மையான செய்தியும் நல்லவிர்த்திகரவான வியாபாரமுண்டாகும் எ-று

## 1-3-2

ஆமப்பா விழுந்த எண்தான் ஒன்றுமூன்றிரண்டேயாகும்
காமத்தை யளித்தமங்கை கைவிடுவாளே யுன்னை
க்ஷேமத்தை கெடுக்கவுந்தன் சொத்துக ளொழிந்துபோகும்
போமப்பா உந்தன் கீர்த்தி பூஜிப்பாய் நவக்கிரகத்தை

(இ-ள்) ஒன்றும் மூன்றும் இரண்டும் விழுமானுல் உனக்கு அபிமானதரராகிய ஓர் மங்கை உன் பொருள் களையும் பரித்து உன்னைக் கைவிடுவாள் அதனுல் உன் க்ஷேமம் கெடும் உனக்கு அபகீர்த்தியு முண்டாகும் பலவித மான கவலைகளும் உண்டு ஆனுல் இன்று முதல் ஒன்பது நாள் நவக்கிரக பூஜை செய் எ-று

## 1-3-3

கிரகங்கள் நல்லதாச்சு காணுமொன் றிருமூன்றுச்சு
மறைந்ததோர் பொருளுஞ்சேரும்மருந்தினுல் நோயும்தீங்கும்
சிறப்புற மணமேகூடும் செய்தொழில் லாபங்காணும்
அறமது புரிந்து வாழ்வாய் அகஸ்தியர்மொழிமீருதே

(இ-ள்) ஒன்றும் மூன்றும்மூன்றும் உதயமானுல் காணமற் போன பொருளாயினும் கிடைக்கும் கனத்த நோயும் நீங்கும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மும் கூடும் தொழிலில் லாபமும் உண்டாகும். அகஸ்தியர் வாக்கை மீருமல் தருமம் செய்து வாழ்வாய் எ-று

## 1-3-6

மீறியே உந்தன் வாக்கை மனைவி மக்களும் நடப்பார்
தூறியே மிகுபோர் நஷ்டம் சனைவரால் வந்துசேரும்
காரியம் கைகூடாது கவலையே அதிகரிக்கும்
தூரியே நோய்கள் காட்டும் துலைதூரம் செய்திதோன்றும்

(இ-ள்) உனக்கு ஒன்றும் மூன்றும் ஆறும் விழுமாகுல் மனைவி மக்களும் உனது வாக்கை மீறி நடப்பார்கள் சினேகிதர்களால் சண்டை பொருள் நஷ்டம் அதிகமான கவலை தீங்கான நோயின் சம்பந்தமும் தீதான சங்கதிகள் தூரத்திலிருந்து வருகையும் காரியம் கைகூடாது எ-று

## 1-6-1

தோன்றிடும் பகைதான் மெத்ததுடர்ந்தொன்றுமாரொன்று (கில்
ஆன்ரோர்கள் தேடிவைத்த ஆஸ்தியு மழிந்துபோகும்
கான்படும் கன்னி தன்னில் மான்படும் கவலைபோலே
வான்பதிக் குள்ளே நீயும் வருந்தவே நேருப்பா

[இ-ள்] உனக்கு ஒன்றும் ஆறும் ஒன்றும் விழுந்தால் மிகவும் பகையுண்டாகும பெரியோர்களின் பொருள் அழியும் கன்னியிற்பட்ட மான்போல் கலங்கி நிற்கவும் நேரிடும் உலகில் மிகுந்த கஷ்டங்களை யடையும் படியாகவுமிருக்கும் தைரியத்தைவிடாதே சீக்கிரத்தில் நன்மையடைவாய் எ-று

## 1-6-2

அப்பனே ஒன்றும் ஆறும் உறுதியாய் இரண்டும்வீழ்ந்ததால்
தப்பாது முடியுமப்பா தானெதை நினைத்தபோதும்
ஒப்பிலா வாழ்வுண்டாகும் உள்ளூரி லடைவாய் லாபம்
கப்பிய பகைநோய் நீங்கும் கங்கணப்ராப்தமாமே

[இ-ள்] ஒன்றும் ஆறும் இரண்டும் விழுந்ததால் நீ நினைத்த எண்ணமெல்லாம் தடங்கலில்லாமல் முடியும் செல்வாக்கான வாழ்க்கையுண்டாகும் உள்ளூரிலேயே நல்ல

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

லாபங்களெல்லாம் கிடைக்கும் பகையும் நோயும் நீங்கு மனையில் சுபகாரியம் நடக்கும எ-று

## 1-6-3

ஆகுமே கவசம் பாரு அப்பனே ஒன்ருர் மூன்றும்
சோகமே பெரிதாய் நிற்கும் சலிப்பிருக்கும் இடத்தை மாற்றும்
ஏகமாய் பொருளும் போகும் இடரான நோயுண்டாகும்
போகுமே தொழிலும் நஷ்டம் பொல்லாப்பு மடைகுவாயே

[இ-ள்] உனக்கு ஒன்றும் ஆறும் மூன்றும் வந்ததால் குடும்பத்தில் கலகம் நேரும் சதா துயரமே மேலிடும் கோபத்தினல் இடத்தை மாற்றிவைக்கும் பொருள் சேதமாகும் இக் கட்டான நோயுண்டாகும் தொழிலும் தவறிபோகும் நிலைமை உண்டாகும் சினேகித பொல்லாப்பு மடைவாய் எ-று

## 1-6-6

அடைகுவாய் லாபமப்பா ஆக ஒன்ருறு மாறும்
தடையின்றி விழுந்ததாலே தடையின்றி மகப்பேராகும்
புடைசூழ குடும்பந்தன்னில் புகழான வாழ்வுண்டாகும்
இடையிலே துயர்வந்தாலும் ஏதொன்று மூணசெய்யாதே

[இ-ள்] இப்பொழுது ஒன்றும் ஆறும் ஆறும் வந்ததால் குடும்பத்தில் புத்திர பாக்கிய முண்டாகும் பந்துக்களுடனே சுக க்ஷேமத்துடன் வாழ்வாய் இதின் நடுவில் கொஞ்சம் கஷ்டத்தையடைந்தபோது அக்கஷ்டம் உன்னை பாதிக்காது உன் ஆயுள் காலம் வரையில் க்ஷேமமாகவே வாழ்வாய் எ-று

## 2-1-1

செய்யவே யிரண்டுமொன்றும் சேர்ந்தொன்று வீழுமானல்
பையவே பொருளும்போகும் பயணமே ரோகதீதாம்
மெய்யதாய் கலகமாரும் மனைவிமக்களும் பகைப்பார்
ஐயமில்லாம லெண்ணம் பலமாய் போகக்கூடும்

(இ-ள்) உனக்கும் இரண்டும் ஒன்றும் ஒன்றும் உதயமான தால் அடிக்கடி பொருள் நஷ்டம் வெளியூர் பிரயாணம் யாத்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரை போகலாகாது மனையில் கலகமும் மனைவி மக்களுக்கு பகையுண்டாவதுடன் எண்ணமும் பலியாது எ-று.

## 2-1-2

கூடுமே யெண்ணமெல்லாம் கூறும் ரெண்டொன்றும் ரெண்டும்
ஓடுமே வினைகளெல்லாம் உடன் பிறந்தோரால் நன்மை
தேடுமுன் கிடைக்குமா தொழிலது நீடிந்தோங்கும்
கோடுசொல் தவறிடாதே கோமான்போல் வாழ்குவாயே

[இ-ள்] தற்போது இரண்டும் ஒன்றும் இரண்டும் விழுந்த தால் பொல்லாத நோயும் தீவினைகளும் நீங்கும் உன்னுடன் பிறந்தவர்களால் வேண்டிய லாபமுண்டாகும். நாடிய பொருள் எதிர்பாராத விதத்திற் கிடைக்கும் தொழில் ஓங்கும் தனவந்தனாக வாழ்வாய் எ-று

## 2-1-3

வாழ நீ எத்தனித்தாய் வக்கரித்தானே கேது
தாழரெண் டொன்றும் மொன்றுா தடைப்பட விழுந்தபோது
குழுமின் குடும்பமின்று சுகங்கெட்டு சிதரிப்போகும்
கோழையாம் சிலபேராலே குலக்கேடு விளையலாமே

[இ-ள்] இரண்டும் ஒன்றும் மூன்றும் விழுந்ததால் உனக்கு கேது வக்கரித்திருக்கிறுன் அதனுல் சுகமாக நீவாழ முடியாது குடும்பம் கலகப்பட்டு ஆளுக்கொரு இடமாக மாற்றி வைக்கும் சில பேர்களால் உனது வம்சத்துக்கே அவ மதிப்பை தேடி வைக்கும் எ-று.

## 2-1-6

வினையாது வெகுவாய் துன்பமிரண்டு ஒன்ருறுமானுல்
பழைய நாள் வழக்கும் வெல்லும் பாவையும் கெர்பமாவாள்
தழைத்துமே குடும்பமோங்கும் தட்டாது உந்தன்
துலைந்திடும் கெண்டம் நோயும் துணையது உண்டு தெய்வம்

[இ-ள்] இரண்டும் ஒன்றும் ஆறும் அடுத்து விழுமானுல் அதிர்ஷ்டவசமான லாபமெல்லாம் கிடைக்கும் முன்னோர்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

களின் குடும்ப வழக்குகளின் சிக்கலொழியும் மனையாளுக்கு கர்ப்பம் தரிக்கும் தழைத்த குடும்பம் செழித்து ஓங்கும் உன் வார்த்தைக் கெதிர் வார்த்தையிராது கெண்டமும் நோயும் நீங்கும் தெய்வம் துணையுண்டு எ-று.

## 2-2-1

தெய்வத்தின் சகாயமுண்டு தென்புலி விருரெண் டொன்றுல்
வையக மீது துன்பம் வருத்திடா துனக்குயேதும்
செய்யவே தொழிலுமோங்கும் சந்தோஷ செய்தி தோன்றும்
பொய் சொல்லா மனிதனுக புவிதனில் வாழ்வாயன்றோ

[இ-ள்] உனக்கு இரண்டு முறை இரண்டும் இறுதியில் ஒன்றும் விழுந்தால் எத்தகைய துன்பமாயினும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகும் தொழிலில் அளவற்ற லாபங்களை யளிக்கும் பலவூர்களிலிருந்து சந்தோஷகரமான செய்திகள் வரும் தவிர பொய்யுரையாத மனிதனுகவும் வாழ்வாய் எ-று.

## 2-2-2

அன்று நீ செய்த பாவம் அலைச்சலும் திரிச்சலாகும்
நன்றில்லை மூரெண்டானுல் நயம் பேசி மோசம் செய்வார்
வென்றிடும் வழக்கானுலும் வகையற்று தோற்று போகும்
ஒன்றுமே பயப்படாது உருபடா முறையிதாம்

(இ-ள்) மூன்று முறையும் இரண்டு விழுமானுல் முன் காலத்தில் நீ செய்த வினையினுல் இப்பிறவியில் வெகு கவலைகள் உண்டு; எக்காரியத்திலும் நன்மை ஏற்படாது கெலிக்கும்படியான வழக்கானுலும் கலகத்தால் தோல்வி பெறும் நீ செய்யும் காரியம் எதுவுமே உருப்படாது சிலநாள் போக வேண்டும் எ-று.

## 2-2-3

ஆமென விரண்டும் ரெண்டும்அடுத்தது மூன்றும் வீழ்ந்தால்
தாமதமாகாதெண்ணம் தடைத்திட செல்வமோங்கும்
போமென வெளியூர் போக பல தொழில் விர்த்தியாகும்
காமனை யெரித்தோன் மைந்தன் கந்தனும் துணையிருப்பான்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

(இ-ள்) இருமுறை இரண்டும் இருதியில் மூன்றும் விழுந்தால் ஆகாத காரியமாயினும் தாமதமின்றி முடியும் செல்வமோங்கும் தொழிலில் வெளியூரில் லாபமுண்டாகும் கந்தநாதனில் கருணையினால் வேலைகளெல்லாம் நீங்கும் எ-று

## 2-2-6

துணையென நம்பிடாதே தொல்லையும் பலபேர் நேசம்
இணையுடனிருரெண்டாறும் இடரப்பா விழுந்ததாலே
வினையமாய் தொழிலும் நஷ்டம் வந்திடும் வழக்கும் வம்பும்
மனையிலே களவுபோக மனைவிக்கு தோஷமாகும்

(இ-ள்) உனக்கு இரண்டு முறை இரண்டும் கடைசியில் ஆறும் விழுந்ததால் நீ ஒருவரையும் நம்பாதே சிலபேர் களால் உனக்கு இடர்விளையக்கூடும் தொழிலில் நஷ்டம் வம்பு வழக்குகளேற்படும் மனையில் களவும்போகும் மனை விக்கு பலவித நோய்களை காட்டும் எ-று

## 2-3-1

தோஷமே நேருமப்பா இரண்டுடன் மூன்றொன்றானால்
மோசமே யுன்னை செய்ய முழுதுமே யோசிப்பார்கள்
காசுடன் தொழிலும் போகும் கவலைகள் மிகவேதோணும்
பாசமா யுள்ளபேரும் பிரிந்திடுவாரே யுன்னை

[இ-ள்] உனக்கு இரண்டு மூன்றும் ஒன்றும் விழுந்தால் பந்துக்காயினும் ஆப்த நண்பர்களாயினும் உனைமோசமே செய்ய யோசிப்பார்கள் கைப்பொருள் விரையமும் தொழில் நஷ்டமும் அதனால் கவலைக்கிடமுமளிக்கும் உனக்கு அன்புள்ள பேர்களாயினும் உனைவிட்டுப் பிரிவார்கள் எ-று

## 2-3-2

உன்மனம் போலேகும் மிரண்டும் மூன்றிரண்டேவீழ்ந்தால்
பண்டைய பொருளும் சேரும் பகைவர்கள் குலமேநாசம்
பெண்டுடன் புத்ரபேரும் பெருகுவாய் வேணலாபம்
கொண்டாடும் உனது தெய்வம் கூடவே துணையிருக்கும்

(இ-ள்) இரண்டுடன் மூன்றும் இரண்டும் விழுமானால் எதிரின்றி நீவாழ்வதுடன் பழைய காலத்தில் மறைந்த பொரு ளாயினும் சேரும் இரண்டு தாரங்களுண்டாகும் புத்ரலாபம்



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பெருகும் பகைர்களின் குலமே நாசமாகும் உன் வீட்டில் மடித்த குலதெய்வங்கள் உனக்கு பக்கத் துணையாக இருக்கும எ-று

2-3-3

இருக்குமே கஷ்டமாக இரண்டுடன் யிருமூன்ருலும்
உருக்குமே உள்ளந்தன்னை உலகிலே கெடு போகும்
பெருக்கமாய் இருந்த செல்வம் பலவித விரையாகும்
நெருக்குமே நோய்தானுன்னை நிலையது நீங்கிப்போகும்

[இ-ள்] இரண்டுடன் இருமூன்று விழுந்தால் அதிக கஷ்டங்கள் மனதை உருக்கும்படியான கவலையுண்டாகும் கெட்டப் பெயரை ஏற்படுத்தும் குபேரசா பத்தான குடும்பமும் கலகலத்து செல்வமொழியும் பலவிதத்தில் பொருள் சேதம் நோயின் கவலை தன்னுடைய சுயபுத்தியையும் மாற்றும எ-று

2-3-6

நீங்கிடும் கவலையெல்லாம் இரண்டு மூன்ருறுமானல்
ஒங்கிடும் உனது செல்வம் உயருமே தொழில் தானப்பா
சோங்கிடும் தோஷம் நோயும் தொலைந்திடும் அஞ்சிடாதே
வாங்கிய கடன் தான் நீங்கி வறுமையுமகன்று போமே

[இ-ள்] இரண்டும் மூன்றும் ஆறும் விழுந்தால் எவ்வித கவலையும் நிலவைக்கண்ட இருள்போல் விலகும் செல்வம் ஓங்கும் மேல் தொழில்களெல்லா முண்டாகும் சகலதோஷங்களும் நோயும் நீங்கும் கடன் தீரும் குடும்பந்தின் வறுமையுமகலும் எ-று

2-6-1

போமென துயரம் போகும் பக்ஷமாய் ரெண்டாருென்றில்
கோமான் போல் வாழ்வுண்டாகும் குடும்பத்தில் மணமே கூடும்
தாமதமின்றி நோயும் திணிந்திடும் வெளியூர் போக
க்ஷேமமே மிகவு முண்டாம ஜெகம் புகழடைகுவாயே

(இ-ள் இரண்டும் ஆறும் ஒன்றும் விழுந்ததால் இல்லத்தின் துன்பங்களெல்லாம் விலகும் தனவந்தனுக வாழ்வு ஏற்படும், மனையில் மணங்கூடும் நோய் நீங்கும் யாத்திரை போகவோ க்ஷேமத்தைத் தரும் பிரக்யாதியளிக்கும் எ-று

2-6-2

வாயவே யிரண்டுமாறும் வருத்தமே மிரண்டும் வீழ்ந்தால்
தோயவேபொருளும் நஷ்டம்தொழில்தனில் நிந்தையுண்டாம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உபாயமாய் சிலபேராலே விரோதமும் கலகமும்
காயமே யழிந்த போதும் கடவுளை மறந்திடாதே

[இ-ள்] உனக்கு இரண்டும் ஆறும் இரண்டு விழுந்த தால் வருத்தமுண்டாம் பொருள் நஷ்டம் தொழிலில் நிந்தை யானப்பெயர் சில பேர்களால் உனக்கு வஞ்சனையும் கலக மும் விரோதமும் உண்டாகும் ஆனால் எத்தகைய துன்பம் நேரிடினும்கடவுளை மறவாதே உன் கஷ்டமெல்லாம் நீங்கிப் போகும் எ-று

## 2-6-3

மறைந்திட்டோர் சேகரித்த மண்மனை வந்துசேரும்
இரண்டுடனாறும் மூன்றும் இணங்கிட செல்வமோங்கும்
சிறத்திடும் நாற்கால் ஜீவன் சீக்கிரம் யெண்ணம்கூடும்
துறந்துமே சென்றபேரும் துரிதத்தில் வருகுவாரே

(இ-ள்) இரண்டு ஆறும் மூன்றும் விழுந்தால் பெரி யோர்கள் தேடிய மனை பூமி நிலம் முதலியவைகள் சேரும் செல்வமானது ஓங்கும் நாற்கால் ஜீவன் கொள்ள பால் பாக்கியமுண்டாகும் எண்ணமும் சீக்கிரத்தில் கூடும் கவலை யடைந்து மனைவிட்டு சென்றோர்களும் வந்து சேர்வார்கள் எ-று

## 3-6-6

வாரென யிரண்டாறு வந்திடில் கெடுதியப்பா
நோவே எடுத்தவேலை நிதானமே மிகுந்துகூடும்
போரது மூளுமப்பா பொருந்திய குடும்பந்தன்னில்
தேரவே வழியுண்டு துதித்திடாய் தெய்வந்தன்னை

(இ-ள்) இரண்டும் இருமுறை ஆறும் வர எடுத்தவேலை கள் எதுவாயினும் நிதானமாகவே கூடும் மனையில் சண்டை நடக்கும் பலவித கவலையுண்டாகும் ஆனால் உனது குலதெய் வத்தையோ நவக்கிரகத்தையோ பூஜை செய்ய நன்மை யுண்டாகும் எ-று

## 3-1-1

தெய்வீகத் தன்மையாலே தேர்ந்து நீ யடைவாய் லாபம்
பையமூன் றீரொன்றாக பாலனே விழுந்ததாலே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வையகந்தனிலுனக்கு வாழ்விலே பின்னமில்லை
செய்யவே தொழிலுமோங்கும் தீர்க்கமாய் ஆயுளுண்டாம்

(இ-ள்) ஒருமுறை மூன்றும் இருமுறை ஒன்றும் விழுந்தால் தெய்வபக்தியினால் வேண்டிய லாபங்களை யடைவாய் குடும்பத்திலும் தொழிலிலும் ஒருவிதம்பின்னமும் மேற்படாது தீர்க்கமான ஆயுளுண்டாகும் எ-று

## 3-1-2

ஆயுளும் அற்பமில்லை அவனியில் கெடுதியில்லை
தோயமூன்யோன்றும் ரெண்டும் தொகுத்தால் லாபமில்லை
சேயரும் பெண்டிருந்தின் சொல்தனை மதிப்பதில்லை
சகாயமு மொருவரில்லை சஞ்சலம் கொஞ்சநாளே

(இ-ள்) மூன்றும் ஒன்றும் இரண்டும் விழுந்தால் எந்த எண்ணத்தை நினைத்தபோதிலும் முடியாது மனைவி மக்களும் உன்னை வெறுப்பார்கள் தவிர உனது சொல்லையும் தவிர்ப்பார்கள் ஒருவருடைய சகாயமுமில்லை நோய் நொடி பாதிக்கினும் ஆயுள் அற்பமாகாது எல்லா கவலைகளும் சிலநாளில் நீக்கும் எ-று

## 3-1-3

கொஞ்சவே மூன்றுமொன்றும் மூன்றும் விழுந்ததாலே
சஞ்சல மொழிந்துபோச்சு சகலமும் நன்மையாச்சு
வஞ்சகம் செய்த பேர்கள் வகையற்று ஒழியலாச்சு
அஞ்சாதே நீ செய்வதெல்லாம் அடைகுவாய் லாபந்தானே

[இ-ள்] மூன்றும் ஒன்றும் மூன்றும் விழுந்தால் உனது சஞ்சலமு மொழிந்து சகலமும் நன்மையாக முடியும் உனை வஞ்சித்த பேர்கள் ஒழிந்து போவார்கள் பலவிதத்தில் லாபமேற்படும் எ-று

## 3-1-6

லாபமில்லை மூன்றொன்றாறில் நஷ்டமேயாகும் பாரில்
ஆபத்தும் சினேகராலே யாகிட மார்க்கமுண்டு
கோபத்தை கைக்கொள்ளாதே கொடுமைகள் மிகவே நேரும்
ஜோபிதம் குறைந்து பாரில் துன்பமும் மிகவுண்டாமே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[இ-ள்] உனக்கு மூன்றும் ஒன்றும் ஆறும் பாய்ச்சிகையில் விழுந்ததால் சிநேகிதரால் ஆபத்தும் நேரலாகும் ஆனால் நீ கோபத்தைப் பாராட்ட வேண்டாம் கிரகத்தின் கோளாறினாலே உனது குணம் கெடும் முகமும் மாறுதலடையும் இருந்தபோதிலும் சில நாளைக்குள் சுகமுண்டு எ-று

## 3-2-1

மிகமிக துயரங்காட்டும் மூன்றிரெண்டொன்றும் வந்தால்
சுகமது வழிந்து போகும் சொல்மொழி தவரலாகும்
பகையது மிகமே நேரும் பயங்கர நோயுண்டாகும்
வகையற்று பொருளிழந்து வறுமையால் வாடுவாயே

[இ-ள்] மூன்றும் இரண்டு ஒன்றும் விழுந்ததால் மிகத் துயரத்தை யுண்டாக்கும் குடும்பத்திலே சுகத்தை கெடுக்கும் ஒருவருக்குரைத்த வாக்கு தவறிப்போகும் பகையும் பயங்கரமான நோயும் கைப்பொருள் விரையமுமுண்டாகும்எ-று

## 3-2-2

வாடவே வேண்டாமப்பாவந்தது நல்ல காலம்
நீடவே மூன்றிரெண்டு நிஷ்டுர மொழிந்து போகும்
தேடவே போன ஜீவன் தெற்கேனும் திசையில் கிட்டும்
பாடலாமிதனை நம்பி பலன் பெற்று ஜீவிப்பாயே

[இ-ள்] ஒருமுறை மூன்றும் இருமுறை இரண்டும் விழ உனக்கு இனி நன்மையான பலன்களெல்லாம் ஏற்படும போன ஜீவன் தெற்கு திசையிலே எதிர்பாராத விதமாய் கிடைக்கும் இனி உன் கவலைகள் நீங்கி உலகில் சுகமாக வாழ்வாய் எ-று

## 3-2-3

ஜீவிய காலமெல்லாம் வறுமையால் வாடி நின்றாய்
பாவிகள் சிலபேராலே பலவித பொருளைத் தோற்றாய்
ஆவியை யழிப்பதற்கும் யோசிப்பார் கவனம வைப்பாய்
சேவித்த ஈசன் தன்னை ஜெகமதில் வாழ்வாய் முன்னே

(இ-ள்) மூன்றும் இரண்டும் மூன்றும் விழுந்தால் மோசமான நிலையில் உன் குடும்பம் ஜீவிக்கின்றது சில துஷ்டர்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

களாலும் வஞ்சகர்களாலும் வேண்டிய பொருளும் நஷ்
மடைந்தாய் உனைக் கொல்லவும் யோசிப்பார்கள் ஆ
ஒருவரிடம் சவகாசம் வையாதே தெய்வத்தை துதி
வந்தால் க்ஷேமமாக இருப்பாய் எ-று

## 3-2-6

மூன்கால வினையிதென்று மூர்க்கமாய் திரியவேண்டா
உன்காலம் நல்லதாச்சு விழவும் மூன்றிரண்டாறும்
பின்னால் நீ வேணலாப பயிர்தொழில் செழிந்துவோங்கும்
ஒன்றுக்கும் அஞ்சிடாதே ஒருவாரம் கழித்திடாயே

(இ-ள்) மூன்று இரண்டு ஆறு விழுந்தால் உனக்
இப்பொழுது நல்ல நேரம் ஏற்பட்டிருக்கின்றது இதை கவ
யாமல் உனது கஷ்ட திசையினால் முன் காலத்திய வி
யென்று மூர்க்கமாக பேசாதே இனி நாளுக்கு நாள் நல்
லாபமும் பயிர் ஓங்கலும் குடும்பத்திலும் மேன்மையுண்டா
எ-று

## 3-3-1

கழித்திட்டாய் யிருமூன்றொன்றும் கருத்துடன்விழுந்ததாலே
பழித்தவர் பாழாய் போவார் இழித்தவர் இடர்க்குள்ளாவர்
செழிக்குமுன் குடும்பமப்பா சேரும் பொன் பூஷணங்கள்
அழிந்ததோர் பொருளும்சேரும் அன்புகொண்டிருந்திடாயே

(இ-ள்) உனக்கு இருமுறை மூன்றும் ஒருமுறை ஒ
றும் விழ உலகில் நல்லவிதமாக வாழ்வாய் உனை பழித்
வர்கள் பாழாவார்கள் இழிவாக பேசியே பேர்களும் பலவி
இடறுக்குள்ளாவார்கள் பொன் பூஷணாதிகள் சேரும் பூரி
பாகவுமிருப்பாய் எ-று

## 3-3-2

கொண்டதோர் கவலையாலே குன்றியே வாடுகின்றாய்
இன்றிரு மூன்றும் ரெண்டும் வந்தால் பொருளும் நஷ்டம்
அண்டொணு துயர்க்குள்ளாகும் அபலமாம் எண்ணம் பாரு
கண்டாலும் விஷம்போல் பார்ப்பார் கஷ்டமும் துயர
முண்டாம்

[இ-ள்] உனக்கு இருமூன்று மிரண்டும் விழ கவலையும்
மனக்கசப்பும் எண்ணத்திற்கு பின்னமும் உண்டாகும்
உனைக் கண்டபோதே பந்துகளும் விஷம்போல் பார்ப்போர்
கள் கஷ்டமும் நஷ்டமும் மிருக்கும் எ-று

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

3-3-3

டாலும் அஞ்சுவார்கள் கருத்துடன் மும்மூன்றுனல்
ண்டாலும் சபை நடுங்கும் வேணவே தனமும் வரும்
ண்டாடும் சிறுவராலே சீமான்போல் வாழ்வுண்டாகும்
ண்டாடும் குலதெய்வங்கள் குடிகொள்ளும் உந்தனுக்கே

(இ-ள்) மும்முறை மூன்று விழுந்ததால் உனக்கு இன்று
நல் நல்ல காலம் ஏற்பட்டிருக்கின்றது உனைக் கண்ட
கவர்களும் அஞ்சுவார்கள் ஒரு சபையில் நீ அமர்ந்தாலும்
ன்னுடைய வாக்கு எதிர்வாக்கு யிரானது உனது மைந்தர்
ால் உனக்கு பிற்காலத்தில் சுகமும் செல்வாக்கும்
ருந்துர் உன் குலதெய்வங்கள் உனக்குத் துணையாக
க்கும் எ-று

3-3-6

ந்தனின் கிரகமெல்லாம் வக்கரமாச்சுதப்பா
ந்தமாய் தொழில் செய்தாலும் சாங்கியே போகுமப்பா
ந்தையாய் இருமூன்றும் வந்தால் கவலையப்பா
ந்தனை மிகவே நேரும் ஜீவன்கள் நஷ்டமாமே

இ-ள்) உன் நல்ல கிரகங்களெல்லாம் வக்கரித்திருப்ப
ல் இருமூன்றும் ஓராறும் விழுந்தது சொந்த வியாபாரமும்
ாங்கிப் போகும் பலவித கவலையுண்டு உயிருள்ள பல
வன்களும் நஷ்டமாகும் எ-று

3-6-1

ஷ்டமே மிகவுண்டாகும் நலமில்லை மூன்றொன்றில்
ஷ்டப்போல் நடப்பாயானுல் இடரது மிகவே நேரும்
ஷ்டமாம் குடும்பந்தன்னில் கைப்பொருள் விரயமாகும்
ஷ்டரால் துடுக்கு நேரும் சலிப்பது அதிகமாமே

[இ-ள்] மூன்று ஆறு ஒன்று விழ பலவிதத்தில் நஷ்ட
ம் மனக்கஷ்டமும் கைப்பொருள் விரையமும் துஷ்டர்
ரின் தொந்திரவும் குடும்பத்தில் மனக்கலிப்பு உண்டாகும்
ன் இஷ்டம்போல் நடந்தால் பலவித இடையூறுகளும்
பவிக்கும் நவக்கிரகத்தை பூஜை செய்து ஜாக்கிரதை
டன் நடந்த நன்மையுண்டாகும் எ-று

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

3-6-2

அதிகமாய் கவலை வேண்டாம் அதிர்ஷ்டமுமுனக்குண்டாச்சு
பதிதனில் மிகவுமேன்மை பாக்கிய மடையப்போராய்
கதியென வடைந்த பேரை கார்த்து ரக்ஷிப்பாய் நீதான்
நிதியுடன் ஏழைகட்கு நிகழ்த்துவாய் தர்மந்நன்னே

[இ-ள்] உனக்கு மூன்றும் ஆறும் இரண்டு விழ மிகவும் அதிர்ஷ்டவசமாக வாழ்வாய் சில நாளில் மிக மேன்மையும் அடைவாய் தஞ்சமென்ற பெயரையும் ஆதரிப்பாய் ஆனால் ஏழைகட்கு உன்னாலியன்ற தருமத்தை செய்துவர அதிக நன்மையுண்டு எ-று

3-6-3

தன்னையே நோகச் செய்யும் தரித்திர திசையுண்டாக்கும்
பின்னும் மூன்றாறு மூன்றும் பிழையுற விழுந்தாலே
ஒன்றுமே புலப்படாது உன் தொழிலில் பொருளும் நஷ்டம்
துன்பமாய் நோயுண்டாகும் துலைந்திடும் மாதமொன்றில்

[இ-ள்] உனக்கு மூன்று ஆறும் மூன்றும் விழுந்ததால் மிக தரித்திர திசையுண்டாகும் உன் புத்திக்குஒன்றுமேபுலப் படாது தொழில் முறையிலும் நஷ்டம் பலவித நோயுமுண் டாக்கும் இதுகளெல்லாம் ஒரு மாதம் போக சுகந்தரும் எ-று

3-6-6

ஒன்றுக்கும் யஞ்சிடாதே ஒரு மூன்று யிராயினால்
நன்றப்பா நினைப்பதெல்லாம் நடந்திட ஜெயமே காணும்
இன்றுடன் உனது பீடை யிடர்களுமொழிந்துபோச்சு
உன்மனைத்தனில் விவாகம் உறுதியாய் கூடும் பாரே

[இ-ள்] மூன்றும் ஈராறும் விழுந்ததால் நீ நினைப்பதெல் லாம் ஜெயமடையும் உன் மனையில் ஓர் விவாக காரியம் கூடும் இன்றுடன் உனது பீடைகளெல்லாம் ஒழிந்துவிட்டது இனிமேல் உனக்கு அதிர்ஷ்டந்தான் எ-று

6-1-1

கூடுமென்றே நினைந்து குதூகல மடைந்திடாதே
நாடிய வாறிரொன்றும் நஷ்டமே யாகுமப்பா

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாடுபட்டே நீ சேர்ந்தே பொருளது ஒழியுமப்பா
வாடிட வேண்டா மின்னும் வாரம்ரெண்டாகவேணும்

[இ-ள்] உனக்கு ஆறும் ஈரொன்றும் வந்ததால் கஷ்ட நஷ்டமும் கவலையும் அதிகரிக்கும் நீ தேடிய பொருளுமழியும் பலவிதத்தில் சிநேகித விரோதங்களும் ஏற்படும் ஆனால் இரணடு வாரம் போக நன்மையுண்டாகும் எ று

6-1-2

வேணுமென்றே நீ செய்யும் வேலையில் லாபமுண்டாம்
பூணுமாரொன்றும் பகழிற விழுந்ததாலே
தோணுமே பலிக்குமெண்ணம் தொந்தார்த்த மொழிந்து
போகும் காணுவாயிதனினுன்மை கந்தனின் கருணையுண்
டாம்

[இ-ள்] ஆறும்ஒன்றும் இரண்டு விழ்ந்ததால் தொழிலில் லாபமுண்டாகும் மனதில் நினைத்த எண்ணமெல்லாம் பலிக்கும் குடும்பத்திலுள்ள தொந்தார்த்தங்களெல்லாம் ஒழிந்து போகும் இன்னும் சிலநாளில் இதனுண்மை காண்பாய் எ-று

6-1-3

கருணையு முனக்குயேது கிரகங்களெல்லாம் தீது
ஆறு ஒன்றும் முன்று விழ அதிர்ஷ்டமும் போச்சுதப்பா
பொருளது விறையமாகும் பொல்லாப்பு அதிகமாகும்
உருபடாதுந்தன் செய்தி ஒன்றுக்கு மஞ்சிடாதே

[இ-ள்] ஆறும் ஒன்றும் முன்றும் விழுந்ததால் உந்தன் எண்ணம் பலிதமாகாது கைப்பொருள் விரையமாகும் பொல்லாப்பு அதிகரிக்கும் நீ எண்ணிய எண்ணங்கள் உருபடாது இருந்தாலும் அஞ்சாதே எ-று

6-1-6

அஞ்சிட வேண்டாமப்பா ஆறும் ஒன்றும் வீழ்ந்ததால்
வஞ்சகப் பீடைநோயும் வறுமையும் ஒழிந்துபோகும்
துஞ்சலே தானியங்கள் துணைவரும் வத்து சேர்வார்
கொஞ்சநாள் போனதானல் கொடுக்கல் வாங்கலிலே லாபம்

[இ-ள்] உனக்கு ஆறும் ஒன்றும் ஆறும் விழுந்ததாகு உனைத்துடர்ந்த பீடையும் நோயும் வறுமையும் வம்பு வழக்கு



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

களும் பகைவர்களின் வஞ்சகமும் ஒழியும் நிலம் செழித்து தானிய விர்த்தியும புதிதான சிநேகிதர்களும் சேருவார்கள் அதனுல் லாபமுண்டாம் எ-று

6-2-1

வாங்கவே மனையும் பாடும் வாறுரெண் டொன்ருல் லாபம்
ஓங்குமே சிறுவர்கட்கு உயர்தரக் கல்வியெல்லாம்
பாங்குள மனைவியை விட்டு பரதேசம் போன பேரும்
தேங்கிடா வந்தே சேர்வார்கள் தீர்ந்தது உனது துன்பம்

(இ-ள்) ஆறும் இரண்டும் ஒன்றும் விழுந்தால் எந்த காரியத்திலும் நல்ல லாபமுண்டாகும் குடும்பத்தில் சிறுவர் களுக்கு கல்வி ஞானம் ஓங்கும் மாடு மனை கொள்ள அதிர்ஷ்ட பாக்கியங்கள் ஏற்படும் மனங் கலங்கிச் சென்று வரயினும் சீக்கிரத்தில் வீடுவந்து சேருவார்கள் உனது கவலைகளும் ஒழியும் எ-று

6-2-2

துன்பமே மிகவுண்டாகும் தொகுத்தாறு மீறிரெண்டால்
அன்புள்ள பேராஞலும் அடுத்துமே பகையுமாவார்
நன்றி நீ செய்தபோதும் நலமொன்றும் மேற்படாது
தன்மையுமழிந்துபோகும் தரித்திரனுக்குமாமே

[இ-ன்] இப்பொழுது ஆறும் ஈரிரெண்டும் வந்ததால் அன்புள்ள சிநேகராயினும் பகையாவார்கள் நீ நன்மையைச் செய்தாலும் அதனுல் நன்றி ஏற்படாது உனது தன்மைகள் ஒழிந்து நன்மையை உண்டாக்கும் தரித்திர. திசையுமேற் படுத்தும் எ-று

6-2-3

ஆக்குமடா தனவானுக ஆறிரெண்டு மூன்று வீழ்ந்தால்
போக்குமே கவலையெல்லாம் பொன் பொருள் மிகவே சேரும்
தேக்குமே உனக்கு நன்மை தேசத்தின் பிணியும் நீங்கும்
நோக்குமே நன்மையாக நல்லதோர் கிரகமெல்லாம்

[இ-ள்] ஆறும் ரெண்டும் மூன்றும் அடுத்து வீழ்ந்ததால் சிலநாளில் உன்னை தனவந்தனுக்கும் குடும்பக் கவலைகள் போகும் பொன் பூஷணங்கள் சேரும் வெகு நன்மையுண் டாக்கும தேகத்தின் நோய் மருந்திஞல் தீரும் நல்ல கிரகங் கள் உனக்கு பார்வையுண்டு எ-று

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## 6-2-6

கிரகத்தின் கோளாறின்றி காட்டிடும் கவலையாலே
உரமுள்ள ஆறும் ரெண்டும் உடனாறும் விழ்த்ததப்பா
பரபரப்பதிகமாக்கும் பாவியென் றேசுவார்கள்
சிறப்புடன் சிலநாள் போக செயமே பெருகுவாயே

[இ-ள்] உனக்கு ஆறும் இரண்டும் ஆறும் விழுந்ததால் அதிக கவலையே உண்டாக்கும் பொல்லாத கிரகத்தின் கோளாறினால் பொருள்மீது பரபரப்பாகும் பாவியென்று பெயரெடுக்க செய்யும் இதெல்லாம் சிலநாள் போக நன்மை யுண்டாக்கும் எ று

## 6-3-1

பெருகிடும் குடும்பந்தன்னில் வறுமையே மிகவுண்டாச்சு
குரும்பர்கள் கலகமாச்சு கோராறு மூனரொன்ருச்சு
உரிமையாய் செய்வியாபாரம் உனக்குப்போ நஷ்டமாச்சு
பொருளது அழிவதற்கு பொல்லாத பிணியுண்டாச்சே

[இ-ள்] உனக்கு ஆறும் மூன்றும் ஒன்றும் உதயமாகியதால் உலகத்தில் நீ மிக்க கவலையடையக் கூடும் குடும்பத்தில் சில குறும்பர்களால் கலகங்கள் நேரும். வியாபாரத்தில் நஷ்டம் வரும் கை பொருளுமழியும் கடனுண்டாகும் அக்கடனால் பொல்லாத நோயையும் தரும் எ-று

## 6-3-2

ஆச்சப்பா நற்காலம் அப்பனே வருகலாச்சு
தாக்ஷிதானில்லையாறும் தனிமூன்றும் ரெண்டும் வீழ்ந்ததால்
போச்சப்பா கவலையெலலாம் போனதோர் பொருளும் சேரும்
மாக்ஷியாய் வாழ்வாய் நீதான் மக்களை பெற்றுவந்தே

[இ-ள்] உனக்கு ஆறும் மூன்றும் இரண்டும்வீழ்ந்ததால் இனிமேல் உனக்கு நல்ல காலமேற்படும் கவலையெல்லாம் போகும் கைவிட்டுப் போன பொருள் கபடமின்றி வந்து சேரும் அதிக செல்வாக்குடன் வாழ்வாய் புத்திர பேரடைந்து புகழ் பெற்றிருப்பாய் எ-று

## 6-3-3

அந்தோவுன் கிரகமெல்லாம் ஆச்சுது நீச்சமாக
சந்தோஷம் மழியலாகும் தனித்தாறு மிறுமூன்ருனல்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நிந்தைகள் மிகவுண்டாகும் நிஷ்டூரக்காரனுக்கு வந்த
நோய் வருந்தங்காட்டும் வலிசண்டை பலவுண்டாமே

[இ-ள்] இப்பொழுது ஆறும் இருமூன்றும் விழுந்ததே ஆகாது குடும்பத்தில் உனக்கு அன்பையும் ஆதரவையும் அழிக்கும் நிந்தையும் நிஷ்டூரமும் ஏற்படுத்தும் வருத்தங் கூடிய நோயுமுண்டாக்கும் பலாத்காரமான சண்டைகளை யுண்டாக்கும் எ-று

## 6-3-6

பலவித கவலை வேண்டாம் பகர்ந்தாறும் மூன்றுருளுய்
நலமது மிகவேயுண்டு நம்பிதெல்லாம் லாபம்
கலகங்க ளொழிந்து போகும் கங்கண ப்ராப்தமாகும்
வலப்பக்கம் மச்சம் காணும் வர்த்தகம் விர்த்தியாமே

(இ-ள்) ஆறும் மூன்றும் ஆறும் விழுந்ததால் இனி கஷ்டமென்று கவலையே வேண்டாம் நினைத்த தெல்லாம் பலிக்கும் நிதானமாகச் செய் அவசரப்படாதே குடும்பத்திலுள்ள கலங்க ளொழியும் கலியாணம் நடக்கும் வர்த்தகம் விர்த்தியாகும் வலது பக்கத்தில் உனக்கு ஓர் மச்சமிருக்கும் அதனல் உனக்கு அதிர்ஷ்டங்களுண்டு எ-று

## 6-6-1

விர்த்தியாய் நிலஞ்செழிக்கும் நீரது சுரக்கும் கேனி
தற்போது ஈராரொன்ருல் தழைத்துமே செழித்து வாழ்வாய்
அற்பமாய் நினைத்திடாதே அகஸ்தியர் வாக்கியத்தை
சொற்படி யெல்லாம் நடக்கும் சுடரொளி முருகன் சாக்ஷி

[இ-ள்] உனக்கு ஈராறும் ஒன்றும் வந்ததால் இடம் விட்டு வேரிடம் போகவும் மாடுமனை கொள்ளவும் லாபமாகும் பூமியானது செழிக்கும் கிணறு தோண்ட நீர் சுரக்கும் தனலாபமுமுண்டாகும் நீ நினைத்த எண்ணமெல்லாம் பலிதமாகும் எ-று.

## 6-6-2

சாக்ஷியே சாதிப்பாகும் சங்கடம் மிகவே நேரும்
சூக்ஷியாய் துரோகம் செய்வாரீருறு மிரண்டும்விழ

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மாக்ஷிசேர் தொழிலும் போகும் மக்கட்கு பீடை காட்டும்
ஆக்ஷியாய் யெல்லாம் நஷ்டம் அகஸ்திய ருரைத்தவாக்கே

[இ-ள்] உனக்கு ஈராறும் ஓரிரண்டும் விழுந்ததால் உனது கெட்ட காலத்தின் அமைப்பால் உன் பேரில் பலர் பொய் சாக்ஷியும்கூறி உனை கெடுப்பார்கள் தொழிலும் நஷ்டமாகும் மனைவி மக்கட்கு நோய் காட்டி நீங்கும் மனதில் நஷ்டம் உனது ஆசைகள் முற்றும் நிராசையாக முடியும் எ-று

## 6-6-3

வாக்கது தப்பாதப்பா விழுந்த தீராறு மூன்றும்
போக்கிய தொழிலும் செல்வம் ஜீவனும் வந்து சேரும்
பாக்கியம் மிகவும் பெற்று பலவித மேன்மையாவாய்
நோக்குவாய் மூதோர் வாக்கை நம்பி நீ வாழ்குவாயே

[இ-ள்] உனக்கு ஈராறும் மூன்றும் விழுந்ததால் கை விட்டுப்போன தொழிலோ ஜீவனோ சீக்கிரத்தில் வந்துசேரும் பாக்கியம் பெற்று பலவிதத்தில் க்ஷேமத்துடன் வாழ்வாய் இது மூத்தோர்களின் வாக்கு பொய்யாகாது எ-று

## 6-6-6

வாழ்வதை கெடுக்கவேதான் வஞ்சகர் கூட்டஞ் சேரும்
தாழ்வுகள் மிகவே நேரும் தணிவுள மூவாராறுல்
சூழ்வினையாலே உந்தன் செல்வாக்கு மகிழ்ந்துபோகும்
பாழ்பட கிரகமெல்லாம் பகையாச்சு அஞ்சிடாதே

(இ-ள்) உனை பாழ்படுத்த நல்ல கிரகங்களெல்லாம் பகையானதால் மூவாறு விழுந்தது அதனுல் உனது வாழ்க்கையைக் கெடுக்க வஞ்சகர்களின் கூட்டம் சேரும் அதனுல் தாழ்வுகள் ஏற்படும் தரித்திரனுக்கும் செல்வாக்குகளழியும் பலவித சேதமுண்டாகும் எ-று

பாய்ச்சிகை சாஸ்திரம் முற்றிற்று

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

# நக்ஷத்திரங்களுக்குரிய நாம எழுத்துக்கள்

| | நக்ஷத்திரங்கள் | நாம எழுத்துக்கள் |
|---|---|---|
| 1. | அஸ்வனி | சு, சே, சோ, ல |
| 2. | பரணி | லி, லு, லே, ேளா |
| 3. | கிருத்திகை | அ, இ, உ, எ |
| 4. | ரோகிணி | ஒ, வ, வி, வு |
| 5. | மிருகசீரிடம் | வே, வோ, கா, கி |
| 6. | திருவாதிரை | கூ, க, ங, ச |
| 7. | புனர்பூசம் | கே, கோ, ஹா, ஹி |
| 8. | பூசம் | ஹூ, ஹே, ஹோ, ட |
| 9. | ஆயில்யம் | டீ, டு, டெ, டொ |
| 10. | மகம் | ம, மி, மூ, மே |
| 11 | பூரம் | மே, ட, டி, டு |
| 12. | உத்திரம் | டே, டோ, பா, பி |
| 13. | ஹஸ்தம் | பூ, ஷ, ண, டா |
| 14. | சித்திரை | பே, போ, ரா, ரீ |
| 15. | சுவாதி | ரு, ரே, ரோ, த |
| 16. | விசாகம் | தீ, து, தே, தோ |
| 17. | அனுஷம் | ந, நி, நு, நெ |
| 18. | கேட்டை | நோ, ய, யி, யு |
| 19. | மூலம் | ே, யே, பா, பி |
| 20. | பூராடம் | பூ, த, ப், ட |
| 21. | உத்திராடம் | பெ, பொ, ஜா, ஜ |
| 22. | திருவோணம் | ஜூ, ஜே, ஜோ, கா |
| 23. | அவிட்டம் | கோ, கி, கு, கே |
| 24. | சதயம் | கோ, ஸ, ஸீ, ஸூ |
| 25. | பூரட்டாதி | வெ, வெ, தா, சா |
| 26. | உத்திரட்டாதி | தூ, தை, தா, தீ |
| 27. | ரேவதி | தெ, தொ, சா, சி |

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

# நக்ஷத்திர யோக சக்கரம்

| | | |
|---|---|---|
| அஸ்வனி | ரோகிணி | புனர்பூசம் |
| பரணி | மிருகசீரிடம் | பூசம் |
| கிருத்திகை | திருவாதிரை | ஆயில்யம் |
| மகம் | ஹஸ்தம் | விசாகம் |
| பூரம் | சித்திரை | கேட்டை |
| உத்திரம் | சுவாதி | அனுஷம் |
| மூலம் | திருவோணம் | பூரட்டாதி |
| பூராடம் | அவிட்டம் | உத்திரட்டாதி |
| உத்திராடம் | சதயம் | ரேவதி |

தனது யோக திசையைக் காண விரும்புவோர் ஓர் புஷ்பத்தைக் கொண்டு பயபக்தியுடன் தனது தெய்வத்தைத் துதித்து மேற்கண்ட சக்கரத்தைத் தொட எந்த வீட்டை தொடுகின்றோமோ அவ் வீட்டிலுள்ள நக்ஷத்திரத்தின் பாட்டைப் படித்துக் கொள்ளவும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## அஸ்வனியின் நக்ஷத்திர பலா பலன்

முக்கியமாய் அஸ்வனி ஆருடமானுல்
மூலாதாரப் பொருளி னருளினுலே
எக்காரியம் செய்தாலும் பலிக்குமப்பா
இழிவான நோய் விலகும் யிடரொன்றில்லே
பக்குவமாய் போன பொருள் வந்துசேரும்
பாலனென்று உன் மனையில் பிறக்கும்பாரு
சிக்கனமாய் குடும்பமது செழித்தேயோங்கும்
சித்தியாம் வாரமொன்றில் கண்டிடாயே

உரை : ஆருடம் அஸ்வனியானதால் ஐங்கரன் அருளி ஞல் எந்த காரியமாயினும் யிடரின்றி பலிதமாகும் பீடையான நோய் மருந்தினுல் நீங்கும் மனையில் புத்திர பாக்கியம் பெருதும் குடும்பம் ஒற்றுமையாக இருக்கும் வெளிதாண்டிய பொருளோ ஜீவனே கிடைக்கும். எட்டு நாள் போக உன் கஷ்டங்களனைத்து நீங்கும் சுகப்படுவாய் உத்தமம்.

## பரணியின் நக்ஷத்திர பலா பலன்

கண்டிடுவாய் பரணியது உதயமாச்சு
கவலேயது குடும்பத்தில் அதிகமாச்சு
பெண்டிரும் பிள்ளேகளும் பகையேயாச்சு
பேசினுல் உன் வாக்கு விஷம்போலாச்சு
உண்டான சினேகிதரால் விரோதமாச்சு
உதவியதை செய்தாலும் அதர்மமாச்சு
கொண்டாடும் குலதெய்வம் துணையும் போச்சு
கொடுமையெல்லாம் வாரமெட்டில் தீரும்பாரே

உரை:-பரணி ஆருடமாக வந்தால் பலவிதத்தில் கவலே யதிகரிக்கும் மனேவிமக்களு பகையாவார்கள் சினேகிதாகளா லும் கெடுதலுண்டாம் உபகாரம் செய்தாலும் அபகாரம் அலேச்சலும் திரிச்சலும் உண்டாகும் உன் வாக்கு பிறருக்கு விஷம்போல் தெரியும் நீ துதிக்கும் தெய்வங்களும் தற்போது

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விலகி நிற்கும் இருந்தாலும் பயமில்லை எட்டு வாரம் போக இடையூறு களெல்லாம் விலகும் மத்திபம்.

## கார்த்திகையின் நக்ஷத்திர பலாபலன்

பாரப்பா கார்த்திகை ஆருடமானால்
பாலகனே ஈரண்டாய் கஷ்டப்பட்டாய்
சீராட்டமே யழிந்தாய் சித்தம் நொந்தாய்
ஜென்மத்தில் கொடிய செவ்வாய மர்ந்ததாலே
போராட்டம் குடும்பத்தில் அதிகமாச்சு
பொன் பொருளும் செய்தொழிலும் நஷ்டமாச்சு
தீராதுன் கவலையென்று தியங்கிடாதே
சிறப்புருவாய் வாரமது மூன்றில் தானே

உரை :- கார்த்திகை உதயமானதால் நீ கவலையால் மெலிந்துக் கலங்கி வாடுகின்றாய் குடும்பத்திலும் சுகமில்லை நம்பினபந்துக்களும் உன்னை கைவிட்டார்கள்சுமார் இரண்டு வருஷங்களாக அளவில்லாத கஷ்டங்களை அனுபவித்திருக்கலாம் பொல்லாத நோயினால் பொருள் விரையமாகியுமிருக்கலாம் இடம் விட்டு வேரிடத்தில் மாற்றியுமிருக்கலாம்பொன் பூஷணங்களெல்லாம் அழிந்து மிருக்கலாம். ஏனென்றால் உன் ஜென்மத்தில் அங்காரகனிருக்கின்றான் அவன் மூன்று வாரத்தில் ஒழிகிறான் அதன் பிறகு சுகப்படுவாய் மத்திபம்.

## உரோகணியின் நக்ஷத்திர பலாபலன்

தானாரும் ரோகிணிதான் உதயமானால்
தழைத்திடவே பஞ்சமத்தில் குருவமர்ந்தார்
வீணாக வந்து துன்பம் விலகி நிற்கும்
வெகுநாளாய் பகையானோ றுறவேயாவார்



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

காணாமல்போன பொருள் வந்து சேரும்
கவலைதரும் நோய் விலகும் மகப்பேராகும்
கோணாமல் மனைவி மக்களுடனே வாழ்வாய்
குறைதரும் நவக்கிரகத்தை துதித்திடாயே

உரை:-உனக்கு பஞ்சமஸ்தானத்தில் குரு அமர்ந்திருப்பதால் பலவிதத்திலும் நன்மையுண்டாகும், மலைபோல் வந்த துன்பங்களும் பனிபோல் விலகும் பகையாளிகளும் உறவாக சேருவார்கள்; தொழில் விர்த்திகரமாகும் காணாமற் போன பொருளாயினும் ஜீவனாயினும் கருத்துடன் வந்து சேரும் புத்திர பாக்கியமுண்டாகும், பந்துக்களுடன் மனைவி மக்களுடனும் செல்வாக்குடன் வாழ்வாய்; அந்த முகம் போனாலும் தங்க முகமாக தோன்றும்; கவலையும் நோயும் கஷ்டமும் இன்னும் இரண்டு வாரத்தில் நீங்கும்; நாடிய எண்ணம் நல்ல விதமாக முடியும்,

## மிருகசீரிஷத்தில் பலாபலன்

துதித்து நீ நவகிரக பூஜை செய்தால்
துலையும் துயர் மிருகசீரிடமேயானால்
மதித்திடவே மன்னவன் போல் மகிழ்ந்து வாழ்வாய்
மணங் கூடும் மகப் பேரும் செல்வாக்குண்டு
சதிபுரியும் நோய் நீங்கும் தொழிலுமோங்கும்
தெற்கேனும் திசையிலிருந்து செய்திதோன்றும்
பதினேழு நாள் போக நன்மையுண்டு
பாலகனே குருமுனி சொல் நம்புவாயே

உரை:-உனக்கு கிரகங்களெல்லாம் உச்சம் பெற்றிருப்பதால் உன்னுடைய பூர்வவினைகளும் வெகுநாட்களாக படுங் கஷ்டங்களும் சூரியனைக்கண்ட பனிபோல் விலகும் குபேர சம்பத்துடனும் புகழ்மிக்க வாழ்ந்திருப்பாய் மனையில் விவாக காரியம் கூடும் கொடுமையான நோயாயினும் படிப்படியாக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விலகும் உனது தொழில் நீடித்தோங்கும் தெற்கு திசையிலி ருந்து நன்மையான செய்திவரும் 17-நாளையில் உனது மனக்கவலை நீங்கி மகிழ்ச்சியடையும். நினைத்த எண்ணம் பலிதமாகும் புத்திர சம்பத்துண்டாகும் இது உத்தமம்.

## திருவாதிரையின் பலாபலன்

நம்பின பேர்களுனை நாசஞ் செய்வார்
நஷ்டம் திருவாதிரைதா னுதயமானால்
வம்புகளும் வழக்குகளும் வந்தேதீரும்
வாது செய்வார் கொடுத்தபொருள் கேட்பாயானால்
பம்பரம் போல் பார்முழுவதும் அலைந்திட்டாலும்
பலியானது உனது யெண்ணம் பகையேயாகும்
சம்பவிக்கும் பலவித நோய் சஞ்சலங்கள்
சாற்றினேன் வாரமைந்தில் தணியுமப்பா

உரை:-உன் கிரகங்கள் கொடியதாக இருப்பதால் நம்பின பேர்கள் நயவஞ்சகம் செய்வார்கள் குடும்பத்தில்பல விதத்தில் வம்பு வழக்குகளையும் தொழிலில் நஷ்டம் நிஷ்டூர மும் கொடுக்கல் வாங்கலில் வாது சூது மேற்படும் தவிர பாதசனியின் கொடுமையினால் அலைச்சல் திரிச்சலும் அமோகமான கஷ்டமும் அகாலபோஜனமும் எண்ணம் அமலமாகவும் முடியும் எந்தவிடம்போய் நின்றாலும் நிந்தனை யும் பகையும் அதிகரிக்கும். நோயும் சஞ்சலமும் நீங்கும் 5-வாரம் போக நன்மையுண்டாகும் இது மத்திபம்.

## புனர்பூசத்தின் பலாபலன்

அப்பனே புனர்பூசம் உதித்ததாலே
ஆபத்தும் கொடிய பிணி கெண்டம் நீங்கும்
தப்பிதங்க ளணுகாது மனை தழைக்கும்
தன லாபம் மாடுமனை கொள்ளலாகும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

செப்பவே சேனநாள் வழக்கு தீரும்
சேய் பிறக்கும் கடன் தீரும் தொழிலுமோங்கும்
ஒப்பில்லா பெரியோர்களுதவியாலே
உறுதியுண்டு சில நாளை கழித்திடாயே

உரை : புனர் பூசம் ஆருடமானதால் படுமோசமான ஆபத்துகளும் பொல்லாத கெண்டங்களும் பாதிக்கும் நோயும் நீங்கும் குறைவின்றி உனது குடும்பம் தழைக்கும் மாடு மனை கொள்ள லாபமுண்டாம் சேனநாள் வழக்கு வெல்லும் புத்திர சம்பத்தும் தொழில் விர்த்தியும் அன்னியரான ஓர் பெரியோரின் உதவியினால் ஆறுதலும் அமோகஒத்துழைப்புகளும் உண்டாகும் ஆனால் ஏழைகளுக்கு உன்னாலியன்ற உதவி புரிந்து வர எவ்வித கஷ்டங்களும் விலகும் இது உத்தமம்.

## பூசத்தின் பலாபலன்

கழித்திடுவாய் இருபத்து ஏழு நாளில்
களிப்புண்டு ஆருடம் பூசமானால்
பழித்தவரும் இழிந்தவரும் பாழாய் போவார்
பகைத்தவரும் நகைத்தவரும் உறவேயாவார்
தழைத்திடவே குடும்பமதில் சுகமே கூடும்
தந்தையுட பொருள் கிடைக்கும் நோயும் நீங்கும்
தொழில் முறையும் விர்த்தியுண்டு மேற்கேலாபம்
தோன்றுமுந்தன் குலதெய்வத்தால் சுகமுண்டாமே

உரை:-எண்ணிய எண்ணம் இடையூறின்றிபலிதமாகும் உனை பழித்தவர்களும் இழிவாக பேசியவர்களும் நாசமாவார்கள் பகையாளிகளும் உனைக்கண்டால் அச்சப்படுவார்கள் தற்போது உனக்கு சுக்கிரன் ஆக்ஷி பெற்றிருப்பதால் அதிஷ்டவசமான பொருள்களெல்லாம் கிடைக்கும் மணங்கூடும் நோய் நீங்கும் மேற்கு திசையிலே லாபமுண்டு தொழில் விர்த்தியாகும். ஆனால் உன் வீட்டில் மடிந்த குலதெய்வங்களை வெள்ளிக்கிழமைகளில் பூஜை செய்து வர 27-நாளில் உன் கஷ்டங்கள் நீங்கும் இது உத்தமம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## ஆயில்யத்தின் பலாபலன்

உண்டாகு மாயில்ய முதித்ததாலே
உன்மனதில் நினைப்பதெல்லாம் தடங்கலாகும்
சண்டைவரும் கெண்டமுண்டு பொருளுனக்கு
சஞ்சலத்தால் மனஞ்சலித்தல் இடத்தை மாற்றும்
பெண்டுபிள்ளை தனைபிரிவாய் பிணியுண்டாகும்
பேசினு லுன்வாக்கு விஷம்போல் தோணும்
கொண்டயெண்ணம் பகல் கனவாய் மாறுமப்பா
கொடுமையது விலகதுதி நவக்கிரகத்தை

உரை:-மனத்தில் நினைத்த எண்ணம் தடங்கலாகும் குடும்பத்திலும் சினேகத்திலும் பகை நேரிடும் பலவிதத்தில் பொருள் சேதமுண்டு மனது சலிப்பு ஏற்படும் அதனால் இடத்தை விட்டும் மாற்றும் மணவி மக்களையும் பிரிய நேரிடும் சொற்பமான நோயாயினும் பற்றராமல் பாதிக்கும் உன் வாக்கு பிறருக்கு விஷம்போல் தெரியும் பகற்கினவாகமாறும் -மாதம் போக நன்மையுண்டாம் மத்திபம்

## மகத்தின் பலாபலன்

கிரகங்கள் உந்தனுக்கு பொல்லாதப்பா
கொடுமையுண்டு ஆருடம் மகமேயானல்
உறமான பந்துகளும் உனைபகைப்பார்
உன்னுடைய கைப்பொருளே விரோதமாக்கும்
விரதமுள்ள தெய்வமெல்லாம் விலகி நிற்கும்
வீண் சண்டை பொருள் விரையந்நோயுண்டாகும்
சிரமமுண்டு தொழில்தனிலே நஷ்டமுண்டாம்
சீர்பெறுவாய் மண்டலத்தில் சிவனே சாக்ஷி

உரை :-நல்ல கிரகங்களெல்லாம் நீச்சம் பெற்றிருப்பதால் பலகவலையும் சினேகித விரோதமும் பந்துக்களும் பகை யாவார்கள் உன் பொருளே உன்னை விரோதமாக்கும் குடும்பத்தில் பல சச்சரவுகளை யுண்டாக்கும் அடிக்கடி நோயின்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கவலையும் பொருள் விரையமும் தொழில் நஷ்டமும் மனக் கஷ்டமும் உண்டாகும். தரித்திர திசையால் மனத்தியக்கத் தை ஏற்படுத்தும் நீ துதிக்கும் தெய்வங்களும் சமயத்தில்தூ மாக நிற்கும் ஆனால் 40-நாள் போக நன்மையுண்டாம் இந் சிவன் சாக்ஷியாக பொய்யாகாது இது மத்திபம்

## பூரத்தின் பலாபலன்

சாக்ஷியது கூறிடுவார் உனை கெடுக்க
சசி நினைப்பார் பூரமது உதயமானால்
தாக்ஷியுறும் செய்வதெல்லாம் நஷ்டமாகும்
தாயுடனே மனைவிமக்கள் பகையுண்டாகும்
கோசார திசைபோல் நலியுங் காணும்
கோபத்தா லிடத்தை விட்டு மாற்றி வைக்கும்
சூக்ஷமாய் மோசமுனை செய்வாரப்பா
சுகம் பெறுவாய் மாதமைந்தி லுறுதிதானே

உரை:-உன் கெட்ட கிரகத்தின் கோசாரத்தினால் உனை கெடுக்க சாக்ஷி கூறி வஞ்சிப்பார்கள் நீ செய்யும் தொழிலில் தாழ்ச்சியும் நஷ்டமும் காரியம் அபஜயமும் நோயின் கவலை யும் இடத்தை விட்டு மாற்றுதலும் உண்டாகும். தாயும் மனைவி மக்களும் உனை நிந்திப்பார்கள் மோசமும் பல நேரி டும் இது களெல்லாம் 5-மாதம் போக நன்மையாகும் இது மத்திபம்.

## உத்திரத்தின் பலாபலன்

உருதியுடன் உத்திரந்தான் உதித்ததாலே
உந்தனை போல் அதிர்ஷ்டசாலி யாருமில்லை
வறுமைபிணி வாய்த்த கெண்டம் வலுத்திடாது
வம்புவழக் கொழியுமப்பா வடக்கே லாபம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பருவமணம் கூடுமப்பா தனமே சேரும்
பகையாள ருறவாவார் தொழிலுமோங்கும்
இருபத்தி யோர்நாளில் வெளியூர்சேதி
இனிகேட்பாய் நினைத்ததெல்லாம் பலிதமாமே

உரை:-உன் கிரகங்கள் உச்சமாக இருப்பதால் உலகில் நல்லவிதமாக வாழ்வாய் இதுவரையில் உனை வருத்திய வறுமையும் அல்லல் படுத்திய நோயும் கொல்ல வந்த கெண்டமும் ஒழிந்தது இனி குடும்பத்திலுள்ள சச்சரவுகள் நீங்கும் மனையில் விவாகம் நடக்கும் தயாதிகள் பொருள் சேரும் வடக்கு திசையில் லாபமுண்டாகும். பகைவர்களும் உறவாவார்கள் 21-நாளில் வெளியிலிருந்து நன்மையான சங்கதி வரும் எண்ணமும் பலிதமாகும் உத்தமம்

## அஸ்தத்தின் பலாபலன்

பலிதமில்லை அஸ்தமது உதயமானுல்
பலவிதத்தில் நிந்தனைகள் நேருமப்பா
வலுசண்டை வம்புகளும் வந்தே தீரும்
வழக்காடினுலுமது தோர்க்குமப்பா
நலிகாட்டும் குடும்பத்தில் கலகமாகும்
நஷ்டமப்பா தொழில் முறைதான் நிந்தையுண்டாம்
தெளிவாகும் இருமாதம் சென்ற பின்னே
தீருமப்பா உந்தனிட துன்பந்தானே

உரை:-அஸ்தமது உதயமானதால் உலகில் பலவித நிந்தனையுண்டாகும் வலிசண்டையும் வம்பு வழக்கும் வரும் வியாஜ்யமாடினுலும் தோற்றுபோகும் நோய் காணும் குடும்பத்தில் கலகமுண்டாம் தொழிலில் நஷ்டமும் நிந்தையுமேற்படும் ஆனுல் இரண்டு மாதம்போக துன்பங்கள் ஒழிந்து நன்மை யுண்டாகும் இது மத்திபம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## சித்திரையின் பலாபலன்

துன்மத்தின் மேல் துன்ப மதிகரிக்கும்
தொகுத்ததோர் சித்திரையு முதயமானால்
அன்புடைய அரசர்களின் பகையுண்டாகும்
ஆதரிந்த பேர்களுனை அவமதிப்பார்
கன்றுடனே மாடுமனை நஷ்டமாகும்
கடன் கொடுத்து கேட்டாலே கபடம் நேரும்
ஒன்பது நாள் நவகிரக பூஜை செய்தால்
ஒழியுமப்பா நாளுக்கு நாள் பீடைதானே

உரை:-உனக்கு துன்பத்தின் மேல் துன்பமதிகரிக்கும் அரசாங்க விரோதமும் நீ ஆதரிந்த பேர்களும் உனனை அவமதிப்பார்கள் மாடு கன்று நஷ்டம் மனை கொள்ள விர்த்திகரமிராது கொடுந்த கடனை கேட்டால் உனை கெடுக்கவே யோசிப்பார்கள் ஆனால் இன்று முதல் ஒன்பது நாள் நவ கோண கர்த்தர்களாகிய கிரகங்களை பூஜை செய்ய நன்மை யுண்டாகும் இது மத்திபம்

## சுவாதியின் பலாபலன்

தானாகும் சுவாதியுமே உதயமானால்
தரித்திரத்தால் பலநாளும் தயங்கச்செய்யும்
வீணாகும் ஒருவருக்கு செய்த நன்றி
விகர்ப்பமே நினைப்பார்கள் உன்னைக்கண்டால்
காணாமல் பரதேசம் போகச் செய்யும்
கடன்காரர் தொல்லையுனக் கதிகரிக்கும்
கோணாத மனைவியரும் பிரிந்து போவாள்
கொடுமையது மாதமூன்றில் விலகும்தானே

உரை:-சுவாதி உதயமாகியதால் சோம்பலும் வீம்பலும் தரித்திரதிசையும் நன்றி செய்தாலும் அதனால் துன்பமும் உண்டாகும் குடும்பத்தில் பகைகொண்டு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் போகவும் செய்யும் கடன்காரர்களின் தொல்லையும் ஏற்படுத்தும் கொண்ட பெண்டிரும் உன்னை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விட்டு பிரிந்துப் போவார்கள்பலவிதமான கவலைகளெல்லாம் மனதில் "குடிகொண்டிருக்கும் இந்த கொடுமைகளெல்லாம் 3-மாதம் போக படிப்படியாக விலகும் இது மத்திபம்.

## விசாகத்தின் பலாபலன்

காணவே விசாகமது உதயமானால்
கவலையே குடிகொண்ட மனமதாகும்
வேணவே மனக்கவலை அதிகரிக்கும்
வேதனையும் வாதனையும் முன்னே நிற்கும்
பூணவே பொன் பொருளும் அழிந்து போகும்
பொல்லாத கலகத்தால் பெயர் கெடுக்கும்
தோணவே சலுகையினால் நோய்தான் காணும்
நீ ஏழுவாரம் வரை தெரிகுவாயே

உரை:-நீ கொண்ட எண்ணம் அபலமாகும். மனதில் கவலையே குடி கொண்டு பைத்தியக் கொண்டவன் போல் திரியச் செய்யும் நாளுக்கு நாள் மனக்கவலையே அதிகரிக்கும் பேய் பிசாசுகளின் பயங்கரங்களேற்படும் அதனால் பல வித இடைஞ்சலு முண்டாகும்; நோயின் வாதனையும் தரும் பொன் பூஷணங்களும் அழியும் பலபேர்களின் கலகத்தால் துஷ்டனென்ற பெயரையும் தரும் ஏழு வாரத்தில் இந்த இடரெல்லாம் நீங்கி சுகத்தை தரும் இது மத்திபம்

## அனுஷத்தின் பலாபலன்

தெரியவே ஆரூடம் அனுஷமானால்
திகட்டாத செல்வமது மனையில் வோங்கும்
பரிவான மனங்கூடும் நோயும் போகும்
பதிவிட்டு போனவர்கள் வரவேநேரும்



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அறிவுள்ள ஆண் குழந்தை மனையில் தோன்றும்
அதனாலே குடும்பமது மிக செழிக்கும்
இருபத்து மூன்று நாளில் இடரே தீரும்
இசைந்ததெல்லாம் ஜெயமடையும் இல்லைதீதே

உரை:- அனுஷம் உதயமானதால் அனுகூலமான பெரியோர்களின் உதவியும் அபாரமான செல்வமும் அபயமென்றடைந்தவரை ஆதரிக்கும் தன்மையும் உண்டாகும். மனையில் திருமணம் நடக்கும் ஆண் குழந்தை பிறக்கும். ஆகாத நோயும் நீங்கும் பகிவிட்டுப் போனவர்களும் அதி விரைவில் வந்து சேர்வார்கள் குடும்பத்தில் ஒரு குறையும் வராது. 23-நாளில் உன் இடரெல்லாம் நீங்கி சுகம் பெறுவாய் இது உத்தமம்.

## கேட்டையின் பலாபலன்

தீதப்பா கேட்டையது உதயமானால்
தீவிரமாய் உன் மனையில் பகையே மூளும்
வாதனையும் வஞ்சகமும் வறுமை காட்டும்
வகையற்று பிறரிடத்தில் பொருளை சேர்க்கும்
சாதனையாய் வேணகுற்றம் சதியும் நேரும்
சலிப்புற்று தெய்வமதை நிந்தை செய்யும்
போதனையால் குடிகெடுக்கும் பெருகும் நஷ்டம்
பேதலித்தே நாளுக்கு நாள் சுகமுண்டாமே

உரை:-கேட்டை ஆருடமாக வந்ததால் கொடும் பகையும் குடிகேடர்களின் கோள்வார்த்தையும் நோயின் வேதனையும் மன வேதனையும் சினேகித வஞ்சமும் வறுமையும் மனஞ்சலிப்பினால் தெய்வ நிந்தனையும் முண்டாக்கும் உன் பொருளையே பெற்றுக் கொண்டு உன்னை பெருமோசத்திற்குட்படுத்துவார்கள் அபாண்டமான குற்றங்களும் ஏற்படும் தைரியத்தை விடாதே, இக்கஷ்டங்களெல்லாம் நாளுக்கு நாள் நவக்கிரகாதிகளின் சகாயத்தால் நன்மையடையும் இது மத்திமம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

## மூலத்தின் பலாபலன்

சுகமுண்டு மூலமது உதித்ததாலே
குதுடையோர் உறவதனை விட்டுபோடு
அகமகிழ ஆண்டவனை நம்பி வாழு
அதனாலே வனுகூல மடைவாய் பாரு
ஜெகமாளும் மன்னனைப்போல் வாழ்வாயப்பா
சேய் பிறக்கும் கடன் தீரும் தெற்கே லாபம்
திகழும் தொழில் நிலபுளமும் மேன்மையாகும்
சேதி வரும் நன்மையுண்டு தெரிகுவாயே

உரை:- மூலம் ஆரூடமானதால் முக்கியமாக மனதில்
ண்ணிய எண்ணம் பலிதமாகும். ஆனால் வஞ்சகர்களின்
றவு வைத்து நெஞ்சம் கலங்காதே கொஞ்சம் நாளில்
ண்டவன் சகாயத்தினால் வேண்டிய செல்வாக்குடனே
ழ்வாய் மனையில் ஓர் பெண் குழந்தை பிறக்கும் குடும்பக்
ன் தீரும் தெற்கு திசையிலே ஓர் லாபம் உண்டாகும்
ாழில் ஓங்கும் நிலபுளமும் நீடித்த செல்வமும் நிந்தை
ற சிந்தனையும் உண்டாகும் வெளியிலிருந்து சந்தோஷ
மான செய்தியையும் கேட்பாய் இது உத்தமம்.

## பூராடத்தின் பலாபலன்

தெரியவே பூராட முதயமாச்சு
தீதற்ற உன் மனதில் தியக்கமாச்சு
அரிய பெரியோர்களின் நேசம் போச்சு
ஆசையெல்லாம் நிராசையாய் மாறலாச்சு
பெரியோர்கள் தேடிவைத்த பொருளும் போச்சு
பெண்மணியால் குடும்பமதில் கலகமாச்சு
சரியற்ற குற்றம்பல உனக்குண்டாச்சு
சஞ்சலமே நீங்குமப்பா வருடமொன்றில்

உரை:-பூராடத்தின் பலன் என்னவென்றால் தைரிய
அரிய பெரியோர்களின் நேசம் பிரியும் துன்பம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நேரும் தெளிவுள்ள உன் மனது தியக்கமுண்டாகும் தீதற் பெரியோர்களின் சிநேகமும் போகும் மூதோர்கள் தேடி வைத்த மூலதன மழியும் உனது ஆசையெல்லாம் நிராடையாகும் ஒரு கன்னிகையால் குடும்பம் கலகப்படும் மனம் துணியாத குற்றமெல்லாம் செய்ய நேரிடும் ஒருவருடம்வரை கொஞ்சம் சஞ்சலமாகவே இருக்கும் இது மத்திபம்

## உத்திராடத்தின் பலாபலன்

வருடமது ஏழுவரை லாபமுண்டு
வருத்தமில்லை உத்திராட முதயமானுல்
பெருமையுறும் குடும்பமதில் செல்வமோங்கும்
பொன் பொருளும் நாணயங்கள் மிகவுண்டாகும்
உருகெடுக்கும் நோயதுதான் ஒழிந்துபோகும்
உடன் பிறந்தோர் பந்துக்களால் உதவியாகும்
சிறுமைபட்டு மனையை விட்டு தாண்டினேரும்
சீக்கிரத்தில் வீடு வந்து சேருவாரே

உரை:-உத்திராடத்தின் பலன் உனக்கு ஏழு வருடம் வரையில் அதிக செல்வாக்குகளையும் குடும்பச் சிறப்பும் பொன் பூஷண சேகரிப்பும் உடன் பிறந்த சகோதரர்களின் ஒத்துழைப்பும் பந்துக்களின் உதவியும் உண்டாகும் பீடிக்கும் நோயானது நீடிக்காமல் நீங்கும். சில நாளைக்கு முன் வறுமையால் வாடி தேசாந்திரம் சென்ற வரும் சீக்கிரத்தில் வீடு வந்து சேருவார்கள். பத்து நாளைக்குள் பலவிதமான துயரங்களெல்லாம் மாறிப்போகும் இது உத்தமம்

## திருவோணத்தின் பலாபலன்

சேரவே திருமோண முதயமானுல்
சீக்கிரமாய் ஜெயங்கூடும் சிக்கலில்லை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நேரவே வெளியூருக்கு போக நன்றும்
நிர்மயமாய் யாத்திரையும் போகநன்றும்
தேரவே வியாபாரம் செய்ய நன்றும்
சிறுவர்களை பள்ளிதனி லமர்த்த நன்றும்
கோரவே உந்தன் குல தெய்வந்தன்னை
குடும்பமது செழித்தோங்கும் குணமிதாமே

உரை:-நீ எண்ணிய எண்ணமெல்லாம் இன்னலில்லாமல் ஜெயமாகும் குடும்பத்தில் சிக்கலிருக்காது; வியாபார காரியமாய் வெளியூருக்கு போக லாபமுண்டாகும். தேவாலயங்களுக்கு யாத்திரைப் போகவும் நன்மையுண்டாகும் தொழில் மேன்மையுண்டு பாலர்களை பள்ளியிலமர்த்த கல்வியானது ஓங்கும், நாளுக்கு நாள் மேலுக்கு மேலாக உன் குடும்பம் மேன்மை பொருந்தும் ஆனல் உன் குலதெய்வங்களை மறவாமல் வெள்ளிக்கிழமைகளில் பூஜை செய்ய நலமுண்டாகும் இது உத்தமம்.

## அவிட்டத்தின் பலாபலன்

குணமான அவிட்டத்தின் குறியைக்கேளாய்
கொற்றவனே வெகுநாளாய் துயர்க்குள்ளானய்
இனமான பந்துகட்கும் எதிரியானய்
இழிவான துஷ்டர்களால் இடர்க்குள்ளானய்
பணம் தேட பாடுபட்டும் நஷ்டமானய்
பாழான நோயினல் பதரலானய்
கனமான சுக்கிரனும் பார்வை பெற்ருன்
கவலையெல்லாம் இனிவிலகும் கலங்கிடாதே

உரை:-உனக்கு அவிட்டம் உதயமாகியதால் இதுவரையில் வெகுகாலமாக மிக மிக துயரப்பட்டாய் சொந்த பந்துக்களும் பகையானய் பல துஷ்டர்களின் இடரினல்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மனக்கவலையுற்ருய் தொழிலிலும் நஷ்டப்பட்டாய் நோயினு லும் கண்டங்களாலும் பாதிக்கப்பட்டாய் ஆனுல் சுக்கிரன் உனக்கு ஏழாமிடத்தில் பார்வை பெற்றிருக்கிருன் ஆதலால் இனி நாளுக்கு நாள் உன் கவலைகளெல்லாம் நீங்கும் க்ஷேம மடைவாய் அஞ்சாதே இது உத்தமம்.

## சதயத்தின் பலாபலன்

கலங்காதே சதயமது உதயமாஞல்
காணுத பொருள்களெல்லாம் கருத்தாய் கிட்டும்
நிலவளமும் மாடுமணை கொள்ள நன்ருய்
நீனிலத்தில் பயிர்செழிக்கும் தனமுமோங்கும்
பலபலவாய் எண்ணமெலாம் பலிதமாகும்
பலமான உத்யோகம் கிடைக்குமப்பா
நலமான காரியங்கள் நடக்கலாகும்
நாளுக்கு நாள் குடும்பம் தழைக்குமாமே

உரை:-சதையம் ஆருடமாஞல் கனவில் கண்ட பொரு ளாஞலும் கிடைக்கும் நிலவளமும் மாடாடு கொள்ள பால் பாக்கியமும் மணைகொள்ள விர்த்திகரமும் தானிய விளைவும் தனலாபமும் உத்தியோக மேன்மையும் குடும்பத்தில்பலவித மான நல்ல காரியங்களும் நடக்கும் நோயானது நீங்கும் எந்தவிதமான எண்ணத்தையும் நினைத்தபோதிலும் தடை யின்றி பலிதமாகும். நாளுக்கு நாள் குடும்ப கலகைளும் நீங்கும் உத்தமம்.

## பூரட்டாதியின் பலாபலன்

தழைக்கவே பூரட்டாதி உதயமாஞல்
தப்பாதுன் வாக்கதான் செல்வ மோங்கும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இழைக்கவே உனக்குயிடர் விளைத்த பேர்கள்
இழிவான நோய் நொடியில் மாள்வாரப்பா
குழைக்கவே பொன் பொருளும் குவியவாழ்வாய்
கொண்ட தொரு பெண்ணாலே குலந்தழைக்கும்
பிழைக்கவே நீடுழிகாலம் வாழ்வாய்
பதினேழு நாள்போக பலிதமாமே

உரை:-பூரட்டாதி உதயமானதினால் உனக்கு புகழானது ஓங்கும் நாணயத் தவராத சொல்லுறுதி உண்டாகும் செல்வ மோங்கும் உனக்கு இதுவரையில் இடைஞ்சல் புரிந்த ஈனர் கள் ஒழிவார்கள் தன தான்ய குவியலும் பொன் பூஷண சேர்க்கையும் உண்டாகும் கொண்ட குணவதியினால் உனது குடும்பமானது தழைத்தோங்கும் கெண்டாதி கண்டங்களும் நீங்கி ஆயுள் பலத்தைக் கொடுக்கும் எண்ணமும் பலித மாகும் இது உத்தமம்.

## உத்திரட்டாதியின் பலாபலன்

பலிக்குமுத்தி ரட்டாதி உதயமானால்
பலமான தொழில் பெரும் சுகமுமோங்கும்
களித்திடவே குருபார்வை யாதலாலே
கவலையுடன் கஷ்டமும் கலகம் நீங்கும்
துளிர்த்திடவே மணங் கூடும் மகப்பேருகும்
துலைதூர செய்திவரும் பிணியும் போகும்
அளித்திடுவான் கருணையது கந்தநாதன்
ஆழிசூ ழுலகினிலே வாழி வாழி

உரை:-உத்திரட்டாதி ஆருடமாக வந்ததால் ஆழிசூழு லகில் ஆறுமுகனின் கருணையால் ஆனந்தம் பெருக வாழ் வாய் பலமான தொழில் பெருகும் குடும்ப சுகமேற்படும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தவிர குரு ஐந்தாமிடத்தின் பார்வையாதலால் அலைச்சலும் கவலையும் கஷ்டமும் குடும்பத்தின் கலகமும் நீங்கும்மனையில் கலியாண காரியங்களும் புத்திர சம்பத்து மேற்படும் வெளியூரின் செய்திவரும் நோயும் கண்டமும் நீங்கும். இது உத்தமம்.

## ரேவதியின் பலாபலன்

வாழவே ரேவதி தானுதயமானல்
வம்புகளும் வழக்குகளும் விலகிப்போகும்
தாழவே யிருந்திட்ட வியாபாரந்தான்
தனலாபமோங்கிடவே விர்த்தியாகும்
சூழவே உந்தனுட குடும்பந்தன்னில்
சுகம் பெருத்து மிகத்துயறு மற்றுப்போகும்
ஏழையா யிருந்தாலும் இனிமேலுந்தன்
இடர் நீங்கி சுகம்பெறுவாய் இனிமேல்தானே

உரை:-ரேவதியின் பலனுவது என்னவென்ருல் குடும்பத்தின் பலவித வம்புகளும் வழக்குகளும் விலகும் கீழ்த்தரமாக இருந்த உனது தொழிலானது மேலுக்கு மேலோங்கும். உனது துன்பங்களெல்லாம் சில நாளைக்குள் இன்பமாக மாறிப்போகும். எதைச் செய்த போதிலும் ஒரு இன்னலும் ஏற்படாது உனது எண்ணமும் பலிதமாகும் இது உத்தமம்.

நக்ஷத்திர யோக சாஸ்திர பலாபலன் முற்றிற்று

சீனிவாச பிரஸ்
67, டி. கே. முதலி தெரு, சூளை,
சென்னை-600 012.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy